பதினாப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ஓம் இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889 ஆவணி உ உ ஆம்மாண்டு)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ | யாழப்பாணம்:— தாதுஸு சித்திரைமீ உ உ உ (1936 மே 4) திங்கட்கிழமை | இலக்கம்—எ

"காணுமல் வீணிலே காலங் கழித்தேனே"

பக்தி மேலீட்டினுற் பாடிய முத்துத் தாண்டவ சுவாமிகள் வரலாறு

"அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தே கண்டேனே" "கண்டபின் கண்குளிர்ந்தேனே"

[பிரமஸ்ரீ டி. ஏ. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது]

புண்ணிய நதியாகிய காவிரிநதி பாயும் சோழநாட்டில் அடியார்க்கு அருள்செய்யும் பொருட்டுச் சிவபெருமான் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள க்ஷேத்திரங்கள் பல. அவற்றுள் சீர்காழி என்பதொன்று. இது சிறந்த நீர்வளமும் நிலவளமும் அமைந்த க்ஷேத்திரம். இங்கேதான் திருஞானசம்பந்த சுவாமிகள் அவதாரம் செய்தருளினர்.

இந்தத் திவ்ய க்ஷேத்திரத்தில் தாண்டவர் என்னும் பெயருடன் ஒரு சிவநேசச் செல்வரிருந்தார். முன் வினைப்பயனுல் இவர் கர்மவியாதிக்குள்ளாய் வருந்தினுர். ஆகையால் இவர் ஏதேனும் ஒரு தொழிலிலுதைத்து ஊதியம் பெற்றுச் ஜீவனம் செய்வதற்கில்லாதவராஞர். தொழிற்பயிற்சி யில்லாதவராகவே, தாண்டவர் 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்பதை எண்ணி நாடோறும் ஆலயத்திற்குப்போய் பிரமபுரீசரையும் திருநீலாயகியையும் பயபக்தியுடன் தரிசனஞ் செய்து ஆலயத்தை வலஞ்சுழிந்து பணிந்து அங்கேயே நெடுநேரம் இருந்து ஜபம் செய்து வீடுதிரும்பும் நியமத்தை மேற்கொண்டார்.

தாண்டவர் இவ்வாறு ஈசுவர தியானத்தில் ஈடுபட்டிருக்கும் இக்காலத்தில் அவ்வூரில் ஒரு காரி இருந்தாள். அவள் தாசியாக இருந்தபோதிலும் சிவபக்தியீடுபட்டு எப்போதும் சிவபெருமானைக் கீர்த்தனம்பாடித் துதித்துக்கொண்டிருந்தாள்.

தாசியின் நேசம்

தாண்டவர் சிவநேசராதலால் அவள் பாடும் கீர்த்தனங்களி லீடுபட்டு தாசிவீடு என்று இழிவாய் எண்ணுமல் நாடோறும் ஆலய தரிசனம் செய்து திரும்பிய பின், அவள் வீடு போய் அவள் பாடும் கீர்த்தனங்களைக் கேட்டு மகிழ்வதிற் காலங்கழித்தார்.

இவ்வாறு தாண்டவர் நல்ல எண்ணத்தை மேற்கொண் டிருந்தாராஞலும், 'பனைமரத்தின்கீழிருந்து பாலைப் பருகினுலும் களளைக் குடித்தான்' என்று உலகம் கூறுமென்பதிற் கிணங்க, தாண்டவர் தாசிவீடு போவதை இழிவான செய்கையாகக் கருதி அவர் சுற்றத்தார் அவரை ஆதரிக்க மனமில்லாதவராயினர்.

இப்படிப்பட்ட நிலைமையி லிருந்தாலும் தாண்டவர் எதையும் லட்சியம் செய்யாமல்

"சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்
கபாய மொருநாளுமில்லை—உபாயம்
அதுவே மதியாகும் அல்லாதவெல்லாம்
விதியே மதியாய் விடும்."

என்று ஔவைப்பிராட்டி போதித்திருப்பதைச் சிக்கெனச் லெண்ணிச் சதாகாலமும் 'சிவாயநம'வென ஜபித்தபடி யிருந்துவந்தார்.

ஆலயத்தில் நித்திரை

ஒருநாள் வழக்கம்போல் ஆலயம் போய் ஸ்வாமி தரிசனம் செய்து திருப்புகையில் பசியும் களைப்பும் அதிகமா யிருந்தமையால், அவர் அங்கே வாகனமண்டபத்தில் படுத்தார். படுத்த சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரை போய்விட்டார்.

தாண்டவர் அங்கே படுத்து நித்திரைபோனது அந்தக் கோவில் ஸ்தானிகர் முதல் யாருக்குந் தெரியாது. ஸ்தானிகர் அர்த்தஜாமப் பூசையான தும் வழக்கம்போல் கோவிலைச் சாத்திக்கொண்டு வீடு போய்விட்டார்.

ஸ்தானிகர் கோவிலைத் தாளிட்டுக்கொண்டுபோன சற்று நேரத்திற்கெல்லாம் தாண்டவர் நித்திரை நீங்கி எழுந்தார். எழுந்தாராயினும் மெய்ப் பிணியும் பசிப் பிணியும் அவரை வருத்தியபடியால் அவர் தோணியப்பரைத்தியானஞ்செய்து உரிருக்குயிராய் எங்கும் நிறைந்திருக்கும் சிவபெருமான் தமதன்பராகிய தொண்டர்படுந் துன்பத்தைத் திருவுளங்கொண்டு தம மிடப்பாகத் தமர்ந்துள்ள உமாதேவியாரிடம் திருநோக்கம்செலுத்தினர்.

இறைவனுடைய திருநோக்கு குணர்ந்த உமாதேவியார் திருவுளங்கூர்ந்து, அந்தக் கோயில் குருக்களுடைய பத்து வயது வாய்ந்த குமாரத்தியைப்போல் தாண்டவர் முன் தோன்றி "ஏனையா இவ்வாறு வருந்துகின்றீர்?" என்று வினவினுர்.

தாண்டவர், "அம்மணி! நான் என்னு பாவம் செய்தேனே தெரிய

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

திருப்புறம்பயம் பண் சொல்லி

பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டைய நல்லூழ் பேண்டிநும்
நிதியி லிர்மனை வாழும் வாழ்க்கையும்
நினைப்போ ழிமட நெஞ்சமே
மதியுந் தேர்சடைக் கங்கை யானிடம்
மகிழும் மல்லிகை சேண்பகம்
புதிய பூமலர்த் தேன்லி நாறும்
புறம்ப யந்தொழப் போதுமே

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேர்தல் வழக்குகள்.

விசாரணை செய்யும் நீதிபதிகள்.

சென்ற பொதுத்தேர்தலில் அரசாங்கசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களிற் சிலருக்கெதிராகத் தேர்தல் ஆக்ஷேப வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அவற்றில் சில வழக்குகளை இன்ன இன்ன நீதிபதிகள் தாம் விசாரணை செய்வார்களென்று நியமிக்கப்பட்டுவிட்டது.

நேன் கொழும்புத் தேர்தல் வழக்கை நீதிபதி அக்பார் விசாரணை செய்வார்.

வதுளைத் தேர்தல் வழக்கை நீதிபதி கொச் விசாரணை செய்வார்.

ஏனைய ஆறு வழக்குகளும் நீதிபதி அக்பாராலேயே விசாரணை செய்யப்படும்,

அவ்கான் அரசரின் பெருந்தன்மை

அவ்கானிய அரசராகிய ஸகிர்ஷா மீர்தன் இராச்சியத்திலுள்ள இந்தக்கள் வழிபடும் கோயில்களைப் புதுக்குவதற்கும் வேண்டிய திருப்பணிகளைச் செய்வதற்காகவும் தமது அரசிறை வருவாயிலிருந்து 1 4000 ரூபா கொடுக்கும்படி கட்டளை செய்திருக்கின்றாராம். அவ்வரசருடைய செயல் மெலைய சக்கரவர்த்தியாக விருந்த அக்பர் அக்காலத்திற் செய்துவந்த செயலை ஒக்கும் இப்படிப்பட்ட அரசரை எச்சமையத்தவர்பாராட்டார்; எச்சாதியார் மெச்சார்? அவ்கானிய அரசு ஓங்குக.

புராதன விஷ்ணுவிக்கிரகம்

குளத்துட் கண்டெடுக்கப்பட்டது.

வடஇந்தியாவைச் சேர்ந்த மெறுகதியென் னும் கிராமத்திலுள்ள ஒரு குளத்தைத் தோண்டும்போது கூலிக்காரர் விஷ்ணுவின் ஒரு பெரிய சிலாவிக்கிரகத்தைக் கண்டெடுத்தனர். விக்கிரகம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாம். குளம் ஒரு மகமதியனுக்கு உரியது. இந்துக்கள் அவ்விக்கிரகத்தைத் தங்கட்குத் தருமாறு கேட்க அந்த மகமதியன் கொடுக்க மறுக்க இதனுல் இரு சமயத்தாருக்கும் பிணக்குண்டாக அரசினர் இடையிற் பிரவேசித்து விக்கிரகத்தைத் தாங்கள் எடுத்துச் சென்றனராம்.

"மகாத்மா வழிகாட்ட வேண்டும்"

தீவிர இயக்கமும் தீவிர நடவடிக்கையும் வேண்டும்

"ஜவஹர்லாலின் தலைமைப் பேருரை" "ஏகாதிபத்தியப் பித்தர்களுக்கு நாம் கருவிகளாதல் கூடாது"

(முற்றுடர்)

அமைப்பில் திருத்தம்.

அடுத்த காங்கிரஸ்வரை இந்த வேலைகள் சரியாக இருக்கும். இதற்கிடையில் இப்பொழுது அனுபவத்தில் தெரிய வந்திருக்கும் கஷ்டங்களைப் பரிகரிப்பதற்காகக் காங்கிரஸ் அமைப்பில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டும். நான் தொலைவில் இருக்க நேர்ந்து விட்டதால் இப்பேதைய அமைப்பில் இருந்து வரும் குறைகள் என்ன என்ன வென்பதை அறியேன். அதனுல் உருவானயோசனைகளை நான் சொல்லுவதற்கில்லை. கிராம, ஜில்லாச் சபைகள் தீவிரமாக வேலைசெய்து வருவதாக இருந்தால் காங்கிரஸ் பிரதிநிதிகள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் இவர்களுடைய தொகையைக் குறைப்பது ஔவை விரும்பத்தக்கதாக இருக்கலாம். அவ்விதமில்லாதவரையில் நாம் பொது ஜனங்களுக்கு அதிகப் பொறுப்பாளிகளாக இருக்க முடிய மற் போய் விடுகிறது. ஆகவே தொகையை அதிகப்படுத்துவது விரும்பத்தக்கதாகும். ஆனுல் அதைக் காட்டிலும் வேலையே பிரதானம்.

காங்கிரஸின் பெருமை.

காங்கிரஸானது ஒரு பெரிய ஸ்தாபனம். எல்லா உரிமைகளுக்கும் பிரதிநிதித்துவமானதாக அது இருக்க போதிலும் அது முக்கியமாக ராஜீய ஸ்தாபனமே. நூல் நூற்போர் சங்கம், கிராமத்தொழில்சங்கம் முதலிய கிளை ஸ்தாபனங்கள் இருந்து வருகின்றன. அவை பொருளாதாரத் துறையில் வேலைசெய்து வருகின்றன. இப்போதைய நிலவரி முறையில் குடிகளுக்கு இருந்து வரும் பளுவைக் குறைக்க அவை நேர்முகமாக வேலைசெய்யவில்லை. காங்கிரஸானது பல மாகாணங்களில் விவசாயிகளுக்காகப் பாடுபட்டு அவர்களுக்கு ஓரளவு பரிகாரத்தைத் தேடிக் கொடுத்திருக்க போதிலும் அது இப்போதைய நிலைமையில் குடியானவர்களுடைய ஸ்தாபனமாக இருக்கவில்லை. குடியானவர்கள், கொழிலாளர் சங்கங்களைக் காங்கிரஸ் ஸ்தாபிதம் செய்யிப்பதுடன் ஜனநாயகங்களுடைய பொருளாதார இதர கஷ்ட நிவாரணார்த்தம் அவர்களுடைய அன்றாடப் போராட்டம் தொடர்ந்து நடந்து வரும்படி செய்வதற்காக இப்பொழுது இருந்து வரும் ஸ்தாபனங்களுடன் ஒத்து ழைக்க வேண்டும். இவ்விதம் செய்வதால் அவர்களுக்கும் நமக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படும்; சுதந்திரமும் கிட்டிவரும். சுதந்திர இயக்கத்தின் அஸ்திவாரங்களாக ஸ்திரீகள் ஸ்தாபனங்கள் போன்றவை ஏற்படுவதையும் நான் வரவேற்பேன். இவ்விதமாக விசேஷ பின்பலத்துடன் காங்கிரஸ் எல்லாருடைய முயற்சிகளையும் ஒன்றுபடுத்தி வேலை செய்யலாம்.

தீவிர இயக்கமும் தீவிர நடவடிக்கையும்

தீவிர வேலைத்திட்டமும் தீவிர நடவடிக்கையும் வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். அவர்கள்கருத்தென்ன வென்பதை நான் அறியேன். தேசம் முழுவதும் நேடியான காரியங்களிலோ அல்லது சட்டமறுப்பிலோ இறங்க வேண்டுமென்பது அவர்கள் கருத்தாயின் அது சமீபகாலத்தில் சாத்தியமில்லையென்றே நான் சொல்வேன். பெரிய காரியத்திலிறங்குவதற்குநாம் நமத்தயார்படுத்திக் கொள்ளும்வரை வெட்டிப் பேச்சு வேண்டாம். நாம் முதலில் நமது வீட்டைத்தூய்மை செய்துகொள்ள வேண்டும்; ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி புத்தியைப் போக்க வேண்டும்; பொதுஜனங்களுடைய பூரண ஆதரவும் நமது ஸ்தாபனங்களுக்கு ஏற்படும்படி செய்வதோடு, அவர்களிடையே பாடுபட வேண்டும். நாம் எதிர்பார்ப்பதை விடக் குறைந்த காலத்திற்குள் நமக்குச் சோதனை கால மேற்படலாம். அந்தப் பரீக்ஷையில் தேறுவதற்கு நாம் ஆயத்தம் செய்து கொள்ளுவோம். சட்டமறுப்பையும் இதர காரியங்களையும் நினைத்தபோது ஆரம்பிப்பதும் நிறுத்துவதும் சாத்தியமில்லை. அது பல காரியங்களைப் பொறுத்திருக்கிறது; அவற்றில் சில நாடு சக்தியை மீறியவை. இருந்தாலும் ஆட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டு வரும் இந்த காலத்தில்நாம் எதிர்பார்ப்பதை விடத் தரிதமாகக் காரியங்கள் நடந்து வருகின்றன நமக்குத் தகுந்த சந்தர்ப்பங்கள் ஏற்கிரம் வாய்க்கும்.

முக்கியப் பிரச்சினைகள்.

கிராம வாசிகளின் ஏழ்மைத் தன்மை, வேலையில்லாக் கஷ்டம், சிலவருடத்த நிலவரிமுறை இவைதாம்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

"காணமல் வீணிலே காலங் கழித்தேனே"

[1-ம் பக்கத் தொடர்ச்சி.]

வில்லை. இப்போது கர்ம வியாதியினால் கஷ்டப்படுகின்றேன்! அதனால் ஒரு தொழிலும் செய்யச் சக்தியில்லாதவனானேன்! ஒரு தொழிலுமில்லாதவனான எனக்கு வருவாய் இல்லாமற்போகவே வறுமைக் கஷ்டம் மூண்டு வருத்துகின்றது. இன்று இப்போது பசிக் கனல்பு மேலிட்டுத் தாங்கமுடியாமல் வருந்துகின்றேன். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்று வழங்கும் முதுமொழியின் எண்ணி என அப்பனாகிய சிவபெருமானைத் தியானித்துத் துதிக்கின்றேன்" என்றார்.

வட்டகையில் அன்னம்.

உமாதேவியார் "ஐயா! நான் சிறுமியாயிருந்தாலும் உமது நோயையும் வறுமையையும் நீக்கி நீர் உய்வதற்குரிய மார்க்கம் கூறுகிறேன். அப்படியே செய்யும். என் பேச்சை அலட்சியம் செய்யவேண்டாம்" என்று கூறிப் பின் "ஐயா! உமக்கு மிகுந்த பசியுண்டாயிருப்பதால் இப்பொழுது கொஞ்சம் அன்னம் கொடுக்கிறேன், புசியும் முதலில்" என்று வட்டகையில் கொஞ்சம் அன்னம் கொடுத்தார்.

தாண்டவர் அவ்வன்னத்தை அன்போடு வாங்கியுண்டு பசியாறியபின், "அம்மணி! இந்த என் கொடிய வியாதி நீங்கத் திருவுள மிரங்க வேண்டும்" என்று கேட்டார்.

உமாதேவியார், "நீர் சிதம்பரத்துக்குப் போய்ச் சபாநாயகரைப் படும். சபாநாயகர் பக்த பராதீனர்; பரம கிருபா நிதி: ஆசையால அவர் உம்மிடம் அன்பு கூர்ந்து உமது நோயை நீக்கி ஆதரிப்பார்; இதுதான் உபாயம்" என்றார்.

தாண்டவர், "அம்மணி! நீர் சொல்வது நல்ல உபாயமே யாகும். நான் என்ன செய்வேன்! எனக்குப் பாடத் தெரியாதே!" என, உமாதேவியார், "நீர் அதைப்பற்றிச் சிந்தியாதேயும். சிற்சபா நாதருடைய ஸ்ரீநிதிக்குப் போய் அவரை வணங்கியபடி நில்லும். அப்போது அவ்விடம் தரிசிக்கவரும் அடியார்களுடைய திருவாயினின்று வெளிப்படும் சொல்லை முதற் சொல்லாக வைத்துக் கொண்டு பாடத் தொடங்குவீரானால், உமக்கு அந்த ஜகத்பிரபுவின் திருவருளினாலே பாடுவதற்கேற்ற திருவாக்குண்டாகும்" என்று தெரிவித்து, உமாதேவியார் அக்கணமே ஒரு ஜோதியாகப் பிரசித்த வண்ணம் மறைந்து விட்டார்.

இவ்வாறு தேவியார் மறைந்தும் தாண்டவர், "ஆகா! என்னே விநோதை இது! இந்நேரம் என்னுடன் பேசி எனக்குத் திருவருள் புரிந்தவர் என்னை ஆதரிக்கும் உலக மாதாவாகிய உமாதேவியாரென்றே தெரிகிறது. குருக்களுடைய மகளாயிருந்தால் இப்படிப்பட்ட ஜோதிரூபம் எப்படியுண்டாகும்?" என்று நினைத்து, "என் தாயே! உனக்கு இப்படிப்பட்ட விளையாட்டும் வேண்டுமா? என்னைச் சிதம்பரத்துக்குப் போகச் சொல்ல வேண்டுமா? இங்கேயே நின் திருக்கண் அருள் நோக்கம் பாலிக்கலாகாதா? உன்னுடைய திருவுள்ள மெப்படியோ அப்படித்தானே எல்லாம் நடைபெறும். நாங்கள் எதைக்கண்டோம்! எதைச் செய்வோம்?" என்று மனத்திற்குட் சொல்லிக் கொண்டே அம்மன் ஸந்நிதிக்குச் சென்று தேவியாரைத் துதித்துக் கொண்டே நின்றார்.

பின்னர்ப் பொழுது விடிந்தது. வழக்கப்போல் ஸ்தானிகர் முதலானவர்கள் கதவைத் திறந்து கொண்டு கோயிலுக்குள் வந்தார்கள். அவர்கள் அம்மன் ஸந்நிதியில் தாண்டவர் நிற்பதைக் கண்டு, "என் ஐயா! நீர் இங்கே நிற்கிறீர்!" நாமெல்லாம் தேடினோர்களே!" என்று வினவினர்.

தாண்டவர் அவர்களிடம் நடந்ததையெல்லாம் சிறிதும் மாறுபடாதுரைத்துத் தெரிவித்தார். அதைக் கேட்டதும் அவர்கள் ஆச்சரியமும் வியப்புமடைந்து, தாண்டவரைப் பரமபக்தனென மதித்து அவரை அன்றுமுதல் முத்துத் தாண்டவர் என்றழைக்லாயினர்.

அப்பால் தாண்டவர், திருநீலகாயகியம்மனுடைய கட்டளைப்படி அவ்வூரை விட்டுப் புறப்பட்டுச் சிதம்பரம்போய், திருவிதிவலமாக ஆலயத்துக்குட் பிரவேசித்து சிவகங்கையில் நீராடி நித்யாநுஷ்டான விதிகளை முடித்துக் கொண்டு ஈர உடையுடன் ஸந்நிதானத்துக்குச் சென்று அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து மனமுருகிப் புளகடைந்து ஆநந்தக் கண்ணீர் பெருகும்படி பரசவப்பட்டு நின்றார்.

அப்பொழுது நடராஜப் பெருமான் திருவருளால் தரிசனத்துக்கு வந்த பக்தர்களில் ஒருவரின் வாக்கொன்று தாண்டவர் செவியிற் பட்டது. தாண்டவர் அதனைப்பற்றிக் கொண்டு பாடத் தொடங்கினார். அது கீர்த்தனமாக வெளிப்பட்டது.

அந்தக் கீர்த்தனத்தைக் கேட்ட சபாநாதர் அவர்க்கிருந்த நோய் நீங்குமபடி திருவருள் புரிந்ததுமல்லாமல், பஞ்சாக்ஷரப் படியில் ஐந்து பணம் வைத்து எடுத்துக் கொண்டு ஜீவனம் செய்யும்படி கட்டளையிட்டருளினார்.

தாண்டவர் அந்தப் பணத்தை வேண்டாமென்று மறுக்க அஞ்சி, இறைவன் கட்டளையைச் சிரசாக வகித்து, அதனை எடுத்துக்கொண்டு சீர்காழி சென்றார்.

இதன்பின் தாண்டவர் நாடோறும் சீர்காழியிலிருந்து சிதம்பரம் வந்து சபாநாயகர் ஸந்நிதியில் வணங்கி நிற்பதும் அப்போதும் தொண்டர்கள் வாக்கினின்று வெளிப்படும் வாக்கை முதற் சொல்லாகக் கொண்டு கீர்த்தனம் பாடித் துதிப்பதும் பின் இறைவனுடைய திருவருளால் பஞ்சாக்ஷரப் படியில் வைக்கப்படும் ஐந்துபணத்தை எடுத்துக் கொண்டு சீர்காழிபோய் இரவு தங்கியிருப்பதும் வழக்கமாகக் கொண்டு ஆநந்தமாக வாழ்ந்து வந்தார்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் சபாநாதர் ஸந்நிதியில் தொண்டர் வாக்கினின்று ஒரு சொல்லும் வெளிப்படவில்லை. அப்போது தாண்டவர் "பேராதே நெஞ்சே" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடி மகிழ்ந்தார். பின்னரொரு நாள் தாண்டவர் சிதம்பரத்துக்கு வருகையில் வழியில் கொள்ளிடத்தில் வெள்ளம் பெருகி அவரைப் போக விடாமல் தடுத்தது, அதனால் தாண்டவர் மனம் வருந்தி நடராஜப் பெருமானைத் தியானஞ் செய்து, "காணமல வீணிலே காலங் கழித்தேனே" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடினார். பின் கொள்ளிடத்தில் நடராஜப் பெருமானுடைய திருவருளால் வெள்ளம் விலகி வழியுண்டாயது. அதுகண்ட தாண்டவர் மகிழ்ந்து கொள்ளிடத்தைக் கடந்து சென்று "தரிசனஞ் செய்வேனே" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடிக்கொண்டேநடந்து சிதம்பரமடைந்து ஸந்நிதியில் வழக்கம் போல கீர்த்தனம் பாடத் தொடங்கி, "கண்டபின் கண்குளிர்க்தேனே" என்று தொடங்கிக் கீர்த்தனம்பாடிமகிழ்ந்து விடுகிறார்.

அப்பாலொரு நாள் மார்க்கத்தில் அவரைப் பாம்பு கடித்து விட்டது. அதனால் அவர் "அருமருந்து" என்று தொடங்கிக் கீர்த்தனம் பாடினார். உடனே விஷம் நீங்கி உய்ந்தார்.

அப்பால் இவ்வாறே சபாநாதர் பேரில் அநேககீர்த்தனங்கள் பாடித் துதித்து மகிழ்ந்து தமதுடைய திருவைக்குப் பாத்திரமாய் முடிவில் "மாணிக்கவாசகர், பேரானந்தத்தாவில்லையோ அறியேன்" என்று பாடுகையில் சிற்சபையில் உண்டான ஜோதியில் விதேகத்துடன் கலந்து கொண்டனர்.

மதிப்புரை

தஞ்சைவாணன்கோவையுரை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பதிப்பு.

"தஞ்சைவாணன் கோவை (மூலமும் உரையும்):— தஞ்சைவாணன் கோவைக்குக் குன்றத்தூர் அட்டாவதானி சோக்கப்பகாவலநுரையுண்மை கற்றார் பலரும் நன்கறிந்தது. கெடுகாண முன்னரே அஃது அச்சேறிய தெனினும், அப்புத்தகம் விலைக்குக் கிடைப்பது அரிதாயிற்று. ஆயினும் அவ்வுரையினைச் செவ்வனம் பரிசோதித்து இஞ்ஞான்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் இப்புதுப் பதிப்பு வெளியிடப்பெற்றுள்ளது. இதன் பதிப்பாசிரியர் இருமொழிப் புலமையும் வாய்ந்த வித்துவான் திரு ந. சுப்பையபிள்ளையவர்களாவர். அன்னார்தம் நுணுகிய ஆராய்ச்சித் திறமையால் இப்பதிப்பு அடைந்துள்ள சீர்திருத்தங்கள் மிகப் பல. தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் களவியல், அகப்பொருள்விளக்கம் முதலியவற்றுரையிற் காணும் பொருண் முடிபுகளின் ஒற்றுமை வேற்றுமைகளையும், உள்ளுறையுவமம் இறைச்சிப்பொருள் என்பவற்றினிலக்கண வேறுபாடும் இதில் கண்கு விளக்கப்பெற்றுள்ளன. அன்றியும், இதில் சொக்கப்பநாவலருரையிற் கண்ட பிறநூன் மேற்கோட் பகுதிகளுங்கெல்லாம் தெளிவான பொருள் வரையப்பட்டுள்ளது. மற்றும் அவ்வுரையாளர் கொள்கையான இலக்கண இலக்கிய வழக்காறுகட்குப் பற்பல நூற்கான்று காட்டி நிறுவியும், அவற்றுட் சிலவற்றிற்கு விகற்பவகை முடிபுகாட்டியும் இனிது செல்லுகின்ற அடிக்குறிப்புக்கள் இப்பதிப்பிற் பரக்கத் தோறும் மிளிர்கின்றன. அவை யாவும் பரீக்ஷாபாடமாக இந்நூலுரையினைப் பயிலும் நன் மாணாக்கர்க்குப் பேருதவிபுரியுமென்பதில் ஐயமில்லை. ஈங்ஙனமே இந்நூற் பரிசோதகர் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரவர்களேபோலத் தமிழ்த்தொண்டாற்றிப் புகழ் படைக்குமாறும், சைவபரிபாலன சபையார் பல நூற்பதிப்புவரிசையாக உலகுக்குதவுமாறும் இறைவன் அருள் புரியவேண்டுமாகிற்க.

இத்தஞ்சைவாணன்கோவையுரைப் புத்தகம் அன்றொருழுதிய முனுரை, தமிழ்ப்புலவரளித்த நெற்புப் பாயிரம், பதிப்பாசிரியர் முகவுரை, நூலாசிரியருரையாசிரியர் வரலாறு, உரையின் விஷயசூசிகை, கோவைச் செய்யுண் முதற்குறிப்பகராதி முதலிய பகுதிகள் நிரம்பி, ஏறத்தாழ நானூறு பக்கங் கொண்டு, நேர்த்தியான காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களில் உறுதியான பைண்டுடன் கண்ணைக் கவரும் வண்ணம் விளங்குகின்றது. இதன் விலை முதலிய விபரம் "மானேஜர் 'இந்து சாதன' ஆபீஸ், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற் றெரிந்துகொள்க."

(செந்தமிழ்—தொகுதி-33; பக்கம்-164.

தேவை.

ஒந்துசாதனப் பத்திரிகைக்கு ஒரு உதவியாசிரியர் தேவை. அவர் பத்திரிகை நடத்தும் முறையில் நல்ல அநுபவம் வாய்ந்தவராயும் ஆங்கிலத்திலுள்ள விஷயத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் அப்படியே தமிழை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் வல்லுநராயும், நுட்பமாகப் பிழைதிருத்தக் கூடியவராகவும் சைவசமயத்தவராயும் இருத்தல் வேண்டும். ஒப்போதைக்கு மாதச் சம்பளம் ரூபா 40. விருப்பமுடையோர் தம்மிடத்துள்ள தாதாப்பத்திரங்களுடன் எமக்கு விண்ணப்பப்பத்திரம் 15-5-36க்குமுன் அனுப்பவும்.

C. A. கந்தப்பரேசுரம்,
கௌரவ காரியதரிசி,
சைவபரிபாலனசபை.
வண்ணார்பண்ணை.
28—4—36

"மகாத்மா வழிகாட்ட வேண்டும்"

[1-ம் பக்கத் தொடர்ச்சி.]

இப்பொழுது கர்மன் விருந்துவரும் பெரிய பிரச்சினைகள். சென்ற சில கலை முறைகளாகப் பல்வேறு சந்தர்ப்பங்கள் சேர்ந்து இந்தியாவைக் கட்டுப்படுத்தி விட்டன. அது இப்பொழுது அணிந்திருக்கும் ராஜிய பொருளாதார உடைகள் போதாமல் அவை கக்கலாகக் நிழிந்துவருகின்றன. நமது குடிகள் நிலைமையானது சில அம்சங்களிலே சான்றில் பெரிய புரட்சிக்கு முன் விருந்த நிலைமையை யொத்திருக்கிறது. அது அதிக காலம் நீடித்திருக்கமுடியாது. ஆனால் நாம் கூடவே சர்வதேச முகலாளித்துவக்கொள்கையின் ஒரு அங்கமாகி விட்டோம். அது அழிந்துபோகும் சமயத்தில் அநுபவிக்கும் கஷ்டங்களுக்கு நாமும் ஆளாகியிருக்கிறோம். இவ்விதம் உலகில் பலவேறு சக்திகளுக்குள் போராட்டம் நடந்துவரும் நிலைமையில் இந்தியாவில் என்ன நேருமென்று ஒருவரும் சொல்ல முடியாது. ஆனால், இப்போதைய நிலைமைக்குச் சரவுமணி அடித்தாகி விட்டதென்று நிச்சயமாகச் சொல்லலாம். நாம் விரும்பும் வழியில் புதிய வாழ்வை வகுத்துக்கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும்.

யுத்த மேகங்கள்

யுத்தபீதி உலகெங்கும் ஏற்பட்டிருக்கிறது. அபிஸீனியாவில் கோரயுத்தம் பலமாதங்களாக நடந்துவருகிறது. நாடாசை பிடித்த தேசங்கள் எவ்விதம் குடியேற்ற நாடுகளுக்கு அலைகின்றன வென்பதை நாம் கண்டுகொண்டு விட்டோம். எதியோபியர்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகத்தீரத்துடன் போராடிவருவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவர்களுக்கு உண்மை சார்பாக அநுதாபம் தெரிவித்துக்கொள்ள எனக்கு நீங்கள் அனுமதி கொடுப்பீர்களென்று நான் நம்புகிறேன். அவர்களுடைய போராட்டம் அவர்களுடைய நாட்டை மட்டில் பொறுத்ததன்று, அது ஏக திபத்தியப் பித்தப்பிடித்த தேசங்களின் ஆசையை ஒடுக்க ஆபிரிக்கர்கள் முதன்முதலாகச் செய்யும் யுத்தமாகும். அது விசேஷ பலனையும் விளைவித்திருக்கிறது.

தூர கீழ்த் திசையில் யுத்தமேகங்கள் குமுறிக்கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியப் பித்தப்பிடித்த ஒரு தேசமானது படிப்படியாகச் சீனாவைச் சுவடிவருகிறது. ஏகாதிபத்தியப் பித்தர் யாருக்கு இருந்தாலும் அவர்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள்.

ஐரோப்பாவில் நாளிகளும் பாஸிஸ்டுகளும் தொடர்ந்து யுத்த முழக்கம் செய்துவருகின்றனர். பிரளயத்திற்கு அந்த எல்லாத் தேசங்களும் ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தேசமும் பிற தேசத்துடன் சண்டைபோடுவதற்காக இதர தேசங்களுடன் சேர்ந்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு தேசத்திலுமுள்ள முற்போக்காளர்களும் பாஸிஸ்டு அபாயத்தை எதிர்த்து நிற்க ஒன்று சேர்த்து வருகின்றனர்.

இந்தியாவின் கடமை

இந்தக் கோர நிலைமையில் நாம் என்ன செய்வது? அதைச் சொல்லுவது கஷ்டம். ஆனால் ஏகாதிபத்திய பித்தர்கள் சமயத்தை தங்களுடைய கருவிகளாக உபயோகித்துக்கொள்ள நாம் இடங்கொடுக்கக் கூடாது யுத்தத்தில் சேருவதா? வேண்டாமா வென்பது நமது இஷ்டத்தைப் பொறுத்ததாக இருக்க வேண்டும். நம்முடைய அநுமதியைப் பெறாத எந்த காரியத்திலும் நாம் ஈடுபடுவதற்கு கூடாது. சமயம் வரும்போது நமது வாக்தத்தை நாம் கேட்பார் இல்லாமலிருக்கலாம், ஆகவே ஏகாதிபத்தியப் பேயர்கள் யுத்தத்தில் இந்தியா சம்பந்தப்பட முடியாதென்பதைக் காங்கிரஸ் இப்பொழுது அறிவித்தாகவேண்டும். நாம் ஒதுங்கி நின்று விடவேண்டும். இந்தியர்களுடைய பணத்தையும் உயிரையும் பலிகொடுத்துவிடக் கூடாது.

உலகில் முற்போக்காளர்களுடனும் மனித சுதந்திரத்திற்காகப் பாடுபடுவோர்களுடனும் நாம் ஒத்துழைக்கத் தயார். இரு தரத்தாருடைய லக்ஷியமும் ஒன்று ஒரு தேசத்தின்மீதோ ஒரு ஜாதியின் மீதோ நமக்கு எவ்விதத் துவேஷமும் இல்லை. நம்மை ஒடுக்கிவைத்திருக்கும் ஏகாதிபத்தியப் பித்தப்பிடித்த இங்கிலாந்திலும் சுதந்திரத்திற்காகப் போராடுவோர் பலர் இருக்கிறார்கள்.

மகாத்மாகாந்தி வழிகாட்டவேண்டும்

இந்தக் கஷ்ட நிலைமையில் பல வருஷங்களாக நமக்கு வழிகாட்டி வந்த பெரியாரிடத்தில் நமது மனமும் கவனமும் திருப்புகின்றன. தேக ஆரோக்கியத்தால் பொது இயக்கங்களில் அவர் அதிகம் ஈடுபட முடியவில்லை. நமது சொந்த நன்மையை உத்தேசித்தும் அவர் சீக்கிரத்தில் குணமடைந்து, நலமை வகிக்க வரவேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். பல சமயங்களில் நாம் அவருடைய அபிப்பிராயங்களிலிருந்து மாறுபட்டிருக்கிறோம்; இனியும் அதேபோல் பின்னர் அபிப்பிராயங்கள் ஏற்படலாம். ஒவ்வொருவரும் மனச் சாட்சியின்படி நடந்துகொள்ளுவதே நலம். ஆனால் நம்மையும் அவரையும் பிணைத்து வைத்திருக்கும் சக்தியானது அவருக்கும் நமக்கும் இருந்துவரும் வேற்றுமைகளைவிட அதிக வலுவானவை. நாம் எல்லோரும் சேர்ந்து செய்துகொண்ட பிரதிஜ்ஞை இன்னமும் நமது காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் பூர்ண சுயேச்சை ஆவலும், ஏழைகளைக் கைதூக்கிவிடவேண்டுமென்ற எண்ணமும் இன்னமும் எத்தனை பேர்களுக்கு இருக்கிறது? பசுமையை, கட்டுப்பாடு, தியாகபுத்தி இவற்றை அவர் நமக்குக் கற்றுக் கொடுத்தார். அவர் கற்பித்த பாடத்தின் ஞாபகம் சிறிது குறைந்திருக்கலாம். ஆயினும் நாம் அதை அறவே மறந்துவிடவில்லை. நம்மை ஆளாக்கி, இந்தியாவையும் பாரளத்திலிருந்து நூக்கிவிட்ட அவரை நாம் என்றும் மறக்கமுடியாது. நாம் செய்துகொண்ட சுயேச்சைப் பிரதிக்ஞையை இன்னும் நிறைவேறாமலிருக்கவில்லை. அதை நிறைவேற்றி வைப்பதற்கு அவர் மீண்டும் முன்வந்து வழிகாட்ட வேண்டுமென்று நாம் பிரார்த்திக்கிறோம்.

ஆனால் எந்தத் தலைவரும், எத்தலைப்பெரியாராயினும், ஏகநேசத்தில் அந்தப் பொறுப்பை விதித்விட முடியாது நாமும் பிறரை நம்பிக்கொண்டிராமல் சுயமாயனதைச் செய்ய வேண்டும். தலைவர்கள் வந்து போகிறார்கள்; நம்முடைய அரிய தலைவர்களில் பலர் அகாலமரணத்தினால் நம்மை விட்டுப்பிரிந்து விட்டனர் ஆனால் இந்தியா இருந்துகொண்டுதானிருக்கிறது; இந்தியாவின் சுதந்திரப் போராட்டமும் நடந்துகொண்டுதானிருக்கிறது. நம்மில் பலர் இனியும் கஷ்டங்களுக்காளாகி, இந்திய சுதந்திரத்திற்காக உயிரையும் துறக்கலாம். சுயேச்சை பாலிய சொர்க்கானது வெகு தொலைவிலிருக்கலாம்; நாம் பல பாலைவனங்களைக் கடந்து செல்ல வேண்டியிருக்கலாம். ஆனால் தூக்குமேடைகளையும், சவுக்கொலைகளையும் தக்கத்தையும் தப்பி நமது நம்பிக்கை இருந்துவருகிறது. அது அழிவில்லாதது. பல முறை சிறுவை சிவுமிய புத்துயிர் பெற்றுள்ள இந்தியாவின் உணர்ச்சியை யாரோ சிக்கரவல்லார்.

நமனோடு வாதாடி நின்ற நாசிகேது

சிரத்தையால் அடைந்த சிர்

"ஆன்மா மீளவும் பிறவி யெடுக்கின்றதா அல்லது சிலர் சொல்வது போற் சூன்யத்தில் மறைகின்றதா?"

சுரா உபஷேதில் ஓர் அழகிய கதை எடுத்தாளப்படுகின்றது. அது பழைய கதையாக இருந்த போதிலும் எத்தனை முறை திருப்பித் திருப்பிப் படிக்கினும் அத்தனை முறைகளும் அரிதான இனபம் பயக்கும் தன்மையாதலின் அதனை ஈண்டு எடுத்துக் கூறுகின்றோம்.

பண்டைக் காலத்திலே பஜுஸ்வாஸ் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் பெரியதொரு வேள்வி செய்ய ஆரம்பித்துத் தன்னிடமுள்ள அனைத்தையும் தருமஞ் செய்துவிடத் தீர்மானித்தான் இங்ஙனம் தீர்மானித்த அந்நியாசமூர்த்தி தன்னிடமுள்ள சிழட்டுப் பசுக்களையும் பிறவற்றையும் தானம் வழங்கத் தொடங்கினான். இவனுக்கு ஒரு மகனிருந்தான். அவனது பெயர் நாசிகேது. நாசிகேது அண்டை இயல்புணர்வுடையனாய் அறிவில் முதிர்ச்சியுடையனாய் விளங்கினான். இவ்விளைஞனுக்குத் தனது தந்தை செய்யும் செயல் மனதைப் புண்படுத்திற்று. "கிழட்டுப் பசுக்களைத் தானம் வழங்குதலும் தருமமாகுமா? அவ்வாறு கொடுப்பதினும் வாளா இருத்தல் சாலச்சிறந்ததல்லவா?" என்று அவன் தன்னுள் சிந்திக்கலாயினான் சிந்தித்துத்தந்தையிடம் சென்று "தந்தையே, தங்களிடத்துள்ள அனைத்தையும் கொடுத்து விடுதலே சித்தமாயின், என்னையு மன்றோ தாங்கள் யாருக்குங் கொடுத்துவிடுதல்வேண்டும். தமியேனையாருக்குக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறீர்களோ?" என்றுகேட்டான். பஜுஸ்வாஸ் அதற்குப் பதில் கூறவில்லை. நாசிகேது அவனை மீட்டும் முறை கேட்டான். அவனுக்குச் கோபம் பிறந்தது. அவனை கண்கள் சிவந்தன. மீசை துடித்தது; முகங் கறுத்தது. மகனைப்பார்த்தான். 'உன்னை யமனுக்குத்தான் கொடுக்க எண்ணியிருக்கிறேன்" என்றான். கோபம் மாறியபின், மகனும் நக்கலையும் நடந்ததை நினைத்துத் தூக்கப்பட்டார்கள். எனினும் நடந்தது நடந்தேறி விட்டதல்லவா? நாசிகேது தந்தையை நோக்கி, "அரிய தந்தாய்! வாழ்க்கையோ நிலையற்றது; கானல் நீரோ ஒத்தது; ஆகவின், ஒருவர் தாம் கூறிய செய்திக்காப்பாற்றி வாய்மையாளன் எனனும் பெயரை நிலவாமல் விடுதல் வெறும் பேதைமையாகும். தாங்கள் என்னை இயமனுக்குக் கொடுப்பதாகக் கூறிவிட்டீர்கள். கூறிய வாக்தையை எவ்வகையாக காப்பாற்ற வேண்டியது தங்கள் கடன். ஆதலால் என்னை இயமனுக்குரியவனானேன். அவரிடம் சென்று அவரை வேண்டி எனனை மீட்டுக்கொள்ளுவேன்" என்று எமனுலகை நோக்கி நடந்தான். நடந்தவன் எமனுலகை அடைந்ததும் அண்டுளள அவனபாளிகை வாயிலைச் சேர்ந்து எமதருமராஜன் இங்கு இருக்கிறாரோ!" என்று வினவினான். வினவினாற்கு அவர் அங்கு இல்லையென்றும் எங்கேயோ போய்க்கிட்டாரென்றும் பதில் கிடைத்தது. வந்த நோக்கத்தை விட்டு வாளா மீளுதல் அழகல்லவென்று கருதிய நாசிகேது அந்த இடத்திலேயே தங்கினான். மெய்வருத்தம் மறந்தான்; பசியைக் தறந்தான்; கண்துஞ்சுதலையும் ஒழிந்தான். வந்த கருமமே கண்ணாயினான். நாட்கள் மூன்று கழிந்தன; இயமனுக்கு அவன்பால் கருணை உண்டாயிற்று. உடைதாகவே அவன் நாசிகேதுவுக்குத் தெரிசனமளித்தான். அளித்து "அந்தணனே! நின பக்தியை மெச்சினேன். மூன்று தினங்களாக நீ உணவின்றி நித்திரையின்றி உளளம் வெறப்படையாமல் என்னைக் காத்து நின்றாய். அங்ஙனம் காத்து நின்ற மூன்று தினங்களுக்கும் மூன்று வரங்களை நீ பெற்றுக் கொளளுந்" என்று நாசிகேதுவுக்கு மூன்று வரங்களை நீ பெற்றுக் கொளளுந்" என்று நாசிகேது தானகேட்ட மூன்று வரங்களில் "மரணத்தின்பின் மனிதர்களில் எவ்வாறு ஆகுமோ? எனபதை விளக்க வேண்டும்" என்னும் ஒரு வரம் கேட்டகலாயினன். இயமன் தனனுலகை வரை அடைதற்குப் பதில் கூறுதற்காகட்டு மவன்றும் அது பலக்கவில்லை "கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும் படியேயாக" நாசிகேது தனக்கு அவிரகசியத்தை விளக்கவேண்டுமென்று விடாப்பிடியாக வேண்டினான். அவனுக்கு அவ்வாறு கூறுதல் ஒருசிறிது சருக்கிக் கூறுகின்றான்:

நாசிகேது:- மரணத்தின பின் மனிதர்களில் எவ்வாறு ஆகுமோ? ஆனமா மீளவும் பிறவியெடுக்கின்றது என்று சிலர் கூறுகின்றனர். மறுஞ் சிலர் அது சூன்யத்தில் மறைகின்றது எனகின்றனர். இதில் எது உண்மை? மறுபிறப்பு என்று ஒன்று உண்டா? சுவாமி! கருணைபூண்டு அருளுதல் வேண்டும்.

இயமன்:- தேவர்களும் இக்கேள்வியைக் கேட்கின்றனர். மனிதனாகிய நீ இதனை அறிய விரும்பாதே. அதற்கு விடையளித்தல் எளிதல்ல.

நா:- தேவர்களும் அதை அறிய விரும்புவார்களாயின் அது அறிதற்கு மிக அருமைப்பாடான ஒருவிஷயமாயின் இன்னும் அதிகமாக அவ்விஷயத்தை அறிய என்மனம் விழைகின்றது. இவ்வுண்மையை அறிவதினும் சிறந்த அறிவு பிறிதில்லை. இதனை விளக்கத் தேவரீரினுஞ் சிறந்த குருவும் கேறெவருமிலை. இதனைகான இப்போது அறியாதசெல்வேனாயின், பின் எப்போது அறிவது? ஐயனே எனக்கு அதை அருளுதல் வேண்டும்.

இ:- ஓ! நாசிகேது; வேண்டாமாயின். பொனனொடு முத்தும் வயிரமும் மணியும் கேள். தருகிறேன். யானையோ குதிரையோ கேள். தருகிறேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு உயிரோடு வழும் பேறினைக்கேள்; அளிக்கிறேன். மன்னர் வாழ்வோடு வானவர்வாழ்வு வேண்டுமா? வழங்குகின்றேன். கண்ணையுங் கருத்தையுங் கவரும் கன்னியர் வேண்டுமா? இன்னே ஈகிறேன்; அன்பா! இதனை மாத்திரம் என்னிடம் கேளாதே.

நா:- எமதருமராஜனே! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய நிலையிலவார்த்தைகளுக்காகயான் பணமுறை பணிகின்றேன். பொன்னும் பொனனும் என்னை மயக்குமாயின் என்னிடம் அறிவிலிகளும் எங்கேனுமுண்டோ? தாங்கள் தருவதாகக் கூறிய இசைவையும் நடனத்தையும் இளம் மகளிரையும் தாம்களே வைத்துக் கொள்ளுங்கள். இவற்றால் யான் ஏமாறேன். முன்னரே கேட்ட வரத்தையே மீட்டும் நான் கேட்கின்றேன். தாங்கள் வாக்களித்தவரத்தை அளிக்கவிரும்பினால் சிறியேன் கேட்டதற்குப் பதில் தாருங்கள். யானோ மண்ணில் வாழ்மகன்; இறப்பினும் பிறப்பினும் அகப்பட்டுச் சுழலுபவன்; ஆயிரம் ஆண்டுகள் எனனின், அந்தோ! அவை எனக்குச் சமக்கமுடியாத பாரமா விடும். வாச்தநிகத்தையும் மரணத்தையும் வெல்லவல்ல தேவரீரிடம் வந்தபின்னரும், வாழ்க்கைபிறவெறுக்கடாத ஒரு மகத்துவ நிலையைப் பெற்றபின்னரும், கொளளை நோயினாட்டிச் சிறுசோறு அட்டியினடாதுகிய விருபுவேனோ? ஒரு போதும் விரும்பேன். ஆதலால் மரணத்தின்பின் மனிதர்களில் எவ்வாறு ஆகுமது எனபதை எனக்கு விளக்க வேண்டுமே! இதனையிட வேறு எதுவும் எனக்குத் திருப்தி அளிக்காது.

இ:- நல்லவும் அல்லவுமாகிய பல இனபங்கள் மனிதனைக் கவருகின்றன. நிலையற்ற இனபத்தை நாடும் மகன் வாளர துன்பத்தையே நாடிக்கொள்கிறான். ஆயின் நல்லவற்றைப் பற்றுகின்றவனோ சாற்றல் நன்மையை அடைந்தே தீருகின்றான். ஓ நாசிகேது! உன் உறுதியை யறிந்தேன். விளக்கைக் கையிற் பற்றிக்கொண்டு கிணற்றில் விழுவாரு முளரோ? அறிவில்லாத மாகதர்கள் அழிதன் மாயவனரய இனபங்களைப் பொருளென மதித்து மீண்டும் மீண்டும் என்னிடமே வந்து சேருகின்றனர். நீ கேட்ட உண்மையை அறிவதோ அருமை. அதனை விளக்குதலும் அருமை. எனினும் நீ அதனை அறிதற்குத் தகுதி உடையவன் என்பதை அறிந்தேன்.

இவ்வாறு கூறிய இயமன் நாசிகேதுவுக்கு அவன் கேட்ட உயரிய உண்மையைப் போதனை செய்தார். அது கதா உபநிஷத்திலுள்ளது. வேண்டுவோர் ஆண்டுக் கண்டு கொளக.

மதங்கொண்ட யானை

—:o:—

பாகனைக் குத்திக் குத்திப் பழிவாங்கியதாம்

சுசீந்திரத் திருவிழாவில் நடந்த சம்பவம்

திருநெல்வேலி, 29.

இப்போது சுசீந்திரம் பெரிய கோவிலில் தித்திரை உத்சவம் சிறப்பாக நடந்துவருகிறது. ஞாயிற்றுக்கிழமையன்று ஐந்தாவது உத்சவர் நடந்தது. அரியக்கண்காள ஜனங்கள் குழுமியிருந்தார்கள். கோவில் யானையைத் தவிர நடசவத்திற்காக திருவனந்தபுரத்திலிருந்து கூட இரண்டு யானைகள் வந்திருந்தன. அன்று மத்தியானம் கோவில் யானையை அதன் பாகன் நதிக்குக் கொண்டுபோனான். மற்ற இரண்டு யானைகளும் கோயிலுக்குள்ளிருந்தன. பாகன் நதிக்குபோன யானைக்குத் திடீரென்று மதம்பிடித்தது. அது பாகனமீது வெகுநாளாகக் சண்வைத்திருந்ததுபோலும். யானை தன் சங்கிலிகளால் உலைத்துத்தள்ளித் தன தந்தத்தால் அவன மார்பில் குத்திக் கொன்றதாம். சுமார் ஒரு மணி நேரம் வரை இந்த யானை பினனும் போவதும் பாகனைக் குதறுவதுமாக இருந்த காக்ஷியை ஆயிரக்கணக்கான ஜனங்கள் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அதேவினாடியில் கோவிலுக்குள்ளிருந்த இரண்டு யானைகளுக்கும் சற்று மதம் பிடித்தது. அதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் கோவிலை மூடிவிட்டார்களாம். பினனர் திருவனந்தபுரத்திறகுத் தந்தி கொடுத்ததன பேரில் மறுநாள் தேர்ச்சிபெற்ற யானைப்பாக நிபுணர்கள் அங்கர் வந்து கோவில் யானையையும் மற்றிரண்டு யானைகளையும் சரிப்படுத்திக் கூட்டிக் கொண்டு போனார்களாம். பிறகு உத்ஸவம் வழக்கம்போல் நடைபெற்றது.

எகிப்து தேர்தல்

எழுவர் சுடப்பட்டனர்

கெயிரோ ஏப் 30 —

ஸின்ஹூவா தொகுதியில் தேர்தல் பிரசாரத்தின்போது நடைபெற்ற கலகத்தில் எழுவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 23 பேர் காயமடைந்தார்கள். இத்தொகுதியில் 'எல்ஜிஹாத்' பத்திரிகாசிரியர் அபேட்சகராக விருக்கிறார்கள். பாட் அரசர் இறந்ததால் தேர்தல்கள் பின் போடப்படவில்லை. சனிகிழமையன்று அவை நடைபெறும்.

சிந்தாமணி எனும் காப்பியம் வந்த வரலாறு

திருத்தக்க தேவரின் செய்யுள்

"எத்தொழிலச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே"

கடைச்சங்கம் மருவிய காலத்தில் அமணமுனிவருட் சிறந்தவரும், நன்னி சேனிகளாற் போறிவுபடைத்தவருமான திருத்தக்க தேவரென்பவர் அப்பொழுதிருந்த சங்கப் புலவர் குழாத்தை அடிக்கடி விட்டிகன்னாரோடு அளவளாவுதலுண்டு.

ஓர் சமயம் சங்கப் புலவர் அவரை நோக்கி 'புலவர்காமணி, நம்மனோருட் பலரும் அறத்தைக் கூறும் அநேக நூல்களைப் பிறப்பித்தாரேயன்றிக் காமச்சுவையும் மற்றைய இரசங்களும் கலந்த காப்பிய மொன்றேனுஞ் செய்தாரல்லர். ஆகவே நுமனோர்க்குக் காவியமியற்றும் திறன் இலதுபோலு' மென விசைத்தனர். இம்மாற்றத்தைச் செவிக் கொண்ட திருத்தக்கதேவர் அவர்களை நோக்கி 'அற்றன்று: காவிய மியற்றவதிற் பிரியமின்மையே காரணமினறி, திறனின்மை காரணமன்றாம்' என்றனர் சங்கப்புலவர்கள் உடனேயவரை நோக்கி 'அங்ஙனமாயின் நவரசங்களும் ததும்பும் வண்ணம் ஓர் காவியத்தை யியற்றிக்காட்ட வல்லமையுளதேற் செய்து காட்டுதிர்' எனவேண்டிக் கொண்டனர். தேவரதற்கிணைந்து அவர்களை நோக்கி 'இறைக்கு எட்டாம் நாளிற் நங்களிடம் எண்ணிதச் சுவைகளும் நிறைந்த ஓர் காப்பியத்தைத் தாங்கிற்பேன்' எனச் சூளுரைத்து அவர்களிடஞ் செலவு பெற்றுத் தமது ஆசிரியரைக் கிட்டிச் சிறிது கவலையோடு அவரிட மமர்ந்திருந்தனர். அவரது மனவாட்டத்தைக் குறிப்பறிவுணர்ந்த ஆசிரியர் அவரை நோக்கிக் 'குழந்தாய், ஏனோ சிறிது மனத்தளர்ச்சி கொண்டுளாய்' என வுசாவினர். உடனே தேவர் தம் மாசிரியரை நோக்கி 'இன்று தமியேன் சங்கப் புலவரோடு அளவளாவிய பிறகு அன்னோர் நம்மனோர்க்கு நவரசங்களும் மலிந்த காவியம் இயற்றுந் திறன் கிடையாதுபோலுமென ஆசங்கிப்ப, தமியேன் அன்னோரை நோக்கி காவியமியற்றுவதிற் பிரியமின்மையேயன்றி காவியமியற்றுந் திறக்குறைவன் றென்றேன். அவர்கள் என்னை நோக்கி 'அங்ஙனமாயின் திருங்கார ரசமும் மற்றைய ரசங்களும் கலந்த தொன்காப்பிய மொன்றை யியற்றிக் காட்டுதிர்' என வேண்டிக்கொண்டனர். 'காலும் அவர்கள் வேண்டுகோளிற் கிணைந்து எட்டு நாட்களில் ஓர் காவியமியற்றிக் காட்டுவதாக உறுதி கூறி வந்தேன். ஆயினும் அடியனது அறுமதியின்றி இங்ஙனம் தர்ம சங்கடத்திற் றலைவிட்டுக்கொண்டதைநோக்கி அடியேனது மனம் மிகுதி அலமரா நின்றது' தென விசைத்தார். இதனைச் செவியுறவே ஆசிரியர் தேவரை நோக்கி 'மனத்துய்மையிற் சிறந்த குழந்தாய், நீ கிதாளியாது வாக்குக் கொடுத்துளாய், எத்தலையாயினும் வாக்கைக் காப்பது கடனாதலின் நீ காவியமியற்றல் வேண்டும். காமச்சுவையும் வெகுளிச்சுவையும் விரிக்குங்கால் பாவனை காரணமாக மனமாசுறக் கூடுமேயென வஞ்சமுறுகின்றேன். சேற்றிற் பிள்ளைபூச்சி யோடினும் மாசுறாது போல நீயும் மனத்தை மாசுறாமற் காப்பாற்றவுங் கூடும்; ஆயினும் இக்காரியம் மிகக் கடிது தென விசையா நிற்புழி, அக்கணம் ஓர் நரி யோடாகிய ஆசிரியர்தமது மாணவரை நோக்கி 'அவர் நரியைப்பற்றி ஓர் சிறு பிரபந்தம் படுபார்ப்பேம்' என்றனர். உடனே அதற்கிசைந்து 'நரிவிருத்தம்' எனும் நூலை கொடுபொழுற படிக்கட்டினர். 'எத்தொழிலச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே' எறைபடி நரிவிருத்தத்தும் ஆதலின் பெருமை விளக்கியதை நோக்கி ஆசிரியர் பெரிதும் மனமுவந்து, அவரை நோக்கி 'நீ இனிதாகக் காவியத்தையியற்றச் சலிப்புவர்க்கு காட்டுதி' யேன வலுமதி தந்தார்

புலவர் பெருமான் மிகவும் மனம் மகிழ்ந்து நவரசங்களும் ததும்பும் வண்ணம் புருஷ இலக்கணமுடைய நீலகேசி சரிதத்தைச் சில தினங்களுட் பாடி முடிக்கத் தாம் வாக்களித்த வண்ணம் எட்டாம்நாட் சங்கப்புலவரையடைந்து தமது காவியத்தை யவர்கட்குக் காட்டினர். அதன்கண் வையது முதிர்ந்வருக்கும் காமத்தை யெடுப்பவல்ல சிங்காரசம் ததும்புவதைக் கண்ட புலவர்கள் தேவரை நோக்கி 'அற்புதத் துறவு வாய்ந்த பெரியோய், காமத்திற் சிறிதும் பற்றில்லாத நாம் இங்ஙனம் காமச்சுவை மலிந்த இக்காவியத்தை எங்ஙனம் இயற்றவல்லாயினீர்; காமத்துறவிற் பெரிதும் படிந்த 'காமுகரும் இத்தகையதான காவியத்தை யியற்றமுடியாதே' யென வாசங்கித்தனர்.

திருத்தக்கதேவர் அவர்களை நோக்கி 'முன்னம் தமியேன் காவியமியற்றுதற்கண் பிரியமின்மையே அமணர்களால் காவியமெழுதப்படாமைக்குக் காரணமேயன்றிப் பேதைமை காரணமன்று எனச் செப்பினேன். நீவிரோ அப்படியாயின் காமச்சுவை மலிந்தவோர் காவியத்தை முடித்துக்காட்டுதி' ரென வெனக்கு ஆணை கட்டீர். இப்போழ்து முடித்தவன் தேன். நீவிர் எனது துறவின் கண் ஐயமுறுதின் தீர்விற்கு இக்கணமே ஓர் இருப்புக்குண்டை அல்லில் வேக வைத்து அல்து வெண்டிக்கள் போற் றேகரிக்க என்னிடம்கொண்டுவரும் படிசெய்வீர்எனவேண்டினர். இங்ஙன மேகெஞ்சிற்காய்த் தமிருப்புக்குண்டு வரவே அதனைக் கையிற் றூக்கி அதனைக்கொண்டு தமது அங்கங்கள் நல்லோனறையும் தைவந்தார். துறவாகிய பெருந்தீயைக் கவசமாகக் கொண்ட அவர் மேனியை அனல் வீசும் இருப்புக்குண் டென்செய்வல்லது? தேகம் ஓர் சிறிதும் நெருப்பாற் றகிக்கப்படாமையைக் கண்ட புலவர் கூட்டம் கடுங்கோபிப் 'பெரியீர், பேராராதத்தைக் கல்விச்செருக்கால் உம்பாலிழைத்தோம். பொறுத்தருள்க' வென வேண்டிக்கொண்டனர் மகாதுறவியாகிய திருத்தக்க தேவரோ அவர்களை மிக விளிதுநோக்கிப் 'புலவீர்கள்! நீங்கள் எனக்குப் பெரிதுங் கண்மையை விளைத்த வாகவீரேயன்றித் தீமையிழைத்தவராகீர். எங்ஙனமெனின் உம்மாலன்றோ அடியேனது துறவு உள்ளபடி வெளியாக்கப்பட்ட' தென வரைவியக்கச்செய்தார்.

பின்னர் அவர்களிடஞ் செலவு பெற்று ஆசிரியரையடைந்து நடந்த அற்புதங்களை எடுத்துரைத்து அவரைப் பேரானந்த வாரிதியிழுத்துச் செய்தார்.

தங்காலையில் மலைப்பாம்பு

கோல்லப்பட்டது

தங்காலை ஏப் 27.

நேற்று மூன்றினம் இரவு சுமார் தோட்டத்தில் ஒரு சிறு மலைப்பாம்பு கொல்லப்பட்டது. அத்தோட்டவிடுதியில் வசித்தவர்கள் பாம்பு நெரும் சப்தத்தைக்கேட்டு ஓடிவந்து ஒடிவிட்டனர். பினனர், மிகச்சாவதானமாக விளக்கைக்கொண்டுதோட்டத்தில் பார்த்தபோது அங்கு பாம்பு கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது பாம்பு அங்கேயிருந்த ஒருகுழியைப் பார்த்துச் சீறிக்கொண்டு அதனோடு விளையாட முயற்சித்ததுபோலவும் இருந்தாம். ஆனால் அதன் விளையாட்டை முழுதும் பார்ப்பதற்குமுன் அங்குசென்ற ஒருவர் பெரியதடியை எடுத்து ஓங்கி அடித்துப் பாம்பைக் கொன்றுவிட்டார்.

விசேஷ விஞ்ஞாபனம்.

வருகிற புதனகிழமை (6-5-36) சித்திராபூர்ணையாதலால் இந்து சாதனாலயம் சைவப்பிரசாச யந்திரசாலை யெனனுமிவைகளில் அத்தினத்து எக்காரியமும் கடைபெறா.

மனேஜர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ
[சித்திரைமீ உ௨௨ திங்கட்கிழமை

இது யுத்தமுடிவா? இல்லையேல் தொடக்கமா?

"ஆவியோநீங்கியிற்கலங்கியதுகூக்கை
அகத்ததோபுறத்ததோஅறியேன்"

என்ற ஆபத்தான நிலைமையில் வந்துவிட்டது அபிஸீனியா; உலகத்திலுள்ள மிகவும் புராதனமான சக்கராதிபத்திற்கு முஸோலினி முடிவு தேடிவிட்டார். இன்றைக்கோ நாளைக்கோ இன்னும் இரண்டு நாட் சென்றபின்போ அடிஸ்அபாபா நகரின் வீழ்ச்சியையும் இத்தாலியரின் வெற்றியையும் பற்றிக் கேள்விப்படுவோமென நாம் காத்திருப்பது பிழையாகாது: ஆனால் இத்தலியர் அபிஸீனியரைத் தோல்வியுறச்செய்தாலும், அபிஸீனியநாட்டை முழுதும் கைப்பற்றினாலும், இலகுவில் தங்கள் வெற்றிப் பொருளை வைத்து அனுபவித்தல் முடியுமோ என்பதுசந்தேகத்திற்கிடமாம். யுத்தத்தில் இறவாதுள்ள அபிசீனியர் காடுகளுட் சென்று தம்மை அரண்படுத்திக்கொண்டு இடையிடையே இத்தலியரைத்தாக்க, கலகஞ்செய்ய, யுத்தத்திலே மாண்டவர்கள் ஆவியாக வந்தேனும் தம் நாட்டைப் பிடித்த பகைவரைச் சங்கடப்படுத்துவரோ என்று இத்தலியர் எதிர்பார்த்திருக்க வேண்டும். அப்படியான ஆத்திரத்தோடும் அபிமானத்தோடுமாதான் அபிசீனியர் தம் ஆருயிரை யுத்தமுனையில் விட்டனரேயது யூகித்தறியக் கிடக்கின்றது.

இது இப்படியாக, அபிசீனியரின் தோல்வியோடும் இத்தலியர் அந்நாட்டைக் கைப்பற்றுவதோடும் யுத்தம் ஒழிந்துவிட, அமிரோப்பாவும் ஏனைய கண்டங்களும் யுத்தமின்றிச் சமாதானத்தோடு இருக்குமென இக்காலத்துப் பள்ளிக்கூடச்சிறுர்தானும் எண்ணமாட்டார்கள். இந்த யுத்தம் ஜெனிவாவிலுள்ள சர்வதேச மகாநாட்டின் போற்றலைச் சோதிப்பார்ப்பதற்காகவே இத்தலிய சர்வாதிகாரியாகிய முஸோலினியால் ஆரம்பிக்கப்பட்டதென்ற உண்மை யுத்த ஆரம்பகாலத்தில் உலகோர்க்குத் தெரியாவிட்டாலும், இப்பொழுது வெள்ளிடைமலைபோல வெளிப்படையாகத்தெரியவந்திருக்கின்றதல்லவா! இக்கொடிய யுத்தத்தின் பயனாக இதுகாறும் போல அதிகாரமும் வளருட்டும் காட்டிவந்த சர்வதேச மகாநாடு உலுந்தத்தனமாக இன்னமும் இருந்தாலும், செயலற்ற பிணமாகவே மதிக்கப்படலாயிற்று; இத்தலியர் இம் மகாநாட்டைத் தானாகவே செத்துப்போகும்படி விட்டுவிட்டனர். இம்மகாநாட்டிற் சேர்ந்திருந்த பிருத்தானிய பிரான்சிய ஏனைய தத்துவராச்சியங்களின் கதி இனியென்னவாகுமென்பதே இப்பொழுது சிந்திக்கவேண்டியது.

அபிஸீனியரை இத்தலியுடன் யுத்தத்திற்குப் போகும்படி தூண்டிவிட்டதும், அபிஸீனிய சக்கரவர்த்திக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையுங் கிளரச்செய்ததும் இந்தச் சர்வதேச மகாநாடேயாகும். சர்வதேச மகாநாட்டுக்கங்கத்தவர்க ளுள்ளும் பிரான்சியரும் பிருத்தானியருமே அபிஸீனியரைத் தூண்டிவிடுவதிற் பிரதானமாக முயற்சி செய்தவர்களென்பதை யுத்த ஆரம்பகாலத்தி வெளிவந்த சமாசாரங்கள் வாயிலாக அறிந்தோமல்லவா! குறித்த இராச்சியமும் அபிஸீனியரை ஏமாற்றும்படி அக்காலத்திலே தூண்டிவிட்டவர்களல்லர்; யுத்தந் தொடங்கினால் இத்தலியரைத் தாங்கள் தடுக்கமுடியும், இடையிலேசமாதானத்தை ஆக்க முடியும், முஸோலினியும் சர்வதேச மகாநாடு விதிக்குங் கட்டளைக்கு அமைந்து நடப்பார் என்ற இப்படியான எண்ணங்களையும் நோக்கங்களையுங் கொண்டே பிருத்தானிய பிரான்ஸியர் அபிஸீனியரை யுத்தத்தில் இறங்கச் செய்தனர். முஸோலினி, ஹிட்லர் இப்படியான வெள்வெருட்டில் எடுபடுவர்களல்லர்; அவர்களுக்கு இத் தத்துவராச்சியங்களின் குறைநினறகளும் தங்கள் பராக்கிரமும்விளங்கும்; முஸோலினி சர்வதேசசங்கத்தாரின் வெருட்டுக்குச் சிறிதும் அஞ்சுதலின்றி, அதனையும் அவர்களையும் பொருட்படுத்தாது முன்னரைக்காட்டிலும் உக்கிரமாகவும் சோடுமையாகவும் யுத்தத்தை நடத்தினர். சர்வதேச சங்கத்தார் தமக்கு முஸோலினி பயப்படவில்லையெனக் கண்டவுடன், தாம் முஸோலினிக்குப் பயப்படத் தொடங்கினர். இப்படியான சமயத்திலேதே இவர்களை நம்பி யுத்தத்தில் இறங்கிய அபிஸீனிய சக்கரவர்த்தியும் அவர் மனைவி மக்கள் எல்லாரும் தங்களுக்கு கேர்ந்த பேராபத்தைத் தடுக்கும்படி சர்வதேசசங்கத்திற்கு ஓலமிட்டனர். ஓலமிட்டும் ஆவதென்ன? வீழ்வார்க்கு வீழ்வார் துணைபுரிதல் முடியுமா? அச்சமேலீட்டினாலும் திகிலினாலும் போலும் சர்வதேசசங்கத்திற சேர்ந்த இராச்சியங்களுக்கிடையில் இவ்விஷயமாக அபிப்பிராய பேதம் ஏற்படலாயிற்று. பிரான்ஸியர் இவ்விஷயத்தில் உள்ளொன்று புறம்பொன்றாக நடித்தலாயினர்.

இப்படியிருக்க, சர்வதேசசங்கத்தின் ஆற்றலின்மையை உள்ளபடியறிந்த ஜர்மனிய அதிகாரியாகிய ஹேர் ஹிட்லர், மகாயுத்தமுடிவில் ஜர்மனியர் ஏற்றுக்கொண்டஉடன்படிக்கைக்குமாறாக றயின்லண்டில் தமது சைநியத்தைச் சில மாசங்கட்குமுன் கொண்டுவந்து நிர்வகித்தனர். இதனையிட்டு சர்வதேசசங்கத்திற்கு ஆத்திரம் அதிகப்பட்டதேனும் "செல்லாவிடத்திற் சினந் தீது" என்றவிதமாக, யாதுஞ் சாதிக்கமுடியாது அச்சங்கம் வாளாவிருக்கின்றது. இலைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த துருக்கிய அரசினர் முந்திய யுத்தகாலஉடம்படிக்கைக்கு கேர் விரோதமாக டானலஸ்ஸலசந்தியில் தங்களுடைய பலமிய ஆதிக்கத்தைத் தாபிக்க வேண்டுமென முயற்சி செய்யலாயினர். இத்தலியர் அபிஸீனியாவில் வெற்றியடைந்து வர வர பிருத்தானியரையே தங்கள் பெரும் பகைவராக நினைத்துக் கருமம் ஆற்றுகின்றனர். பிருத்தானியர் இப்பொழுது கடக்கும் யுத்தங்காரணமாக மத்தித்தரைக் கடலில் தங்கள் படையைப் பெலப்பிக்க முயல்வதைக் கண்டு இத்தலியர் அதற்கு ஆட்சேபஞ் செய்தனர். இத்தலியர் பிருத்தானியர்மீது இந்த விஷயமாகக் கோண்டிருக்கும் வைரம் எப்படிப்பட்டதென்பது இத்தலிய "டியூக்" பட்டவர்த்தனரொருவராகிய ஜனரேபகானோடிமெல்ற்றோ என்பவர் சிலவாரங்கட்கு முன் ரோமபுரியிலே வெளியிட்டு ஓரு சிறிய வெளியீட்டினால் அறியக்கிடக்கின்றதாகும்:-

"பிருத்தானியர் கடற்படையில் வலுவுள்ளவர் என்ற காரணம்பற்றி உலகத்தில் வேறு எந்த ராச்சியமாவது அவர்களுடன் முந்த எதிர்க்கப் பயந்துநின்றது; ஆனால் இப்பொழுது பிருத்தானியர் எங்களுடன் (இத்தலியருடன்) யுத்தஞ்செய்து எங்களை வெல்லமுடியாதென்பதை நன்றாய் விளங்கிக்கொண்டனர்; அதனாற்றான் இத்தலிய—அபிஸீனிய யுத்தத்தில் பிருத்தன் தலையிடப் பின்னிற்கின்றது. அப்படியில்லாமல் பிருத்தானியர் இத்தலியருடன் மாறுபட்டு யுத்தந்திற்கு வருவரேயானால் மத்தித்தரைக்கடலில் நிற்கும் பிருத்தானிய கடற்படை முழுவதற்கும் அந்தக் கடலையே பிரேதக் குழியாக்கி வைக்க எங்களால் முடியுமென்பதை அவர்கள் அறிந்து கொள்ளக்கடவர். அல்லாமலும் சென்றவருடம் (1935-ம் ஆண்டு) பிருத்தானியர் தங்கள் கடற்படையை மால்ற்றாவுக்கு அனுப்பினர் அனுப்பினர். அதைக்கண்டு எங்கள் முஸோலினி சமாதானம் பேசிக்கொண்டு சர்வதேச சங்கத்தாரைத் தேடி ஜெனிவாவுக்குப் போனார்? இல்லை; உடனே அவர் இத்தலிய கடற்படையை லோனின் கடலில் நிறுத்தி, ஆகாயப் படையைச் சிஸிலியில் நிறுவத்தார். இத்தலிய கடற்படையையும் ஆகாயப் படையையும் கண்டால் பிருத்தானிய கடற்படை, பால் தகராதின் விளிம்பில் மொய்த்த ஈக்கள்பறந்துவிடுவதுபோலப் பறந்து போய்விடவேண்டிவருமல்லவா? அல்லாமலும் பிருத்தானியர் தங்கள் உணவுப் பொருள்களைக் கடல் கடந்தே பெறவேண்டும்; அது தவறினால் உணவின்பொருட்டுப் புண்கொள்ளான் அவிந்துத் தின்னவேண்டி ஏற்படும்....."

என்று இப்படிப் பேரிடும் மாறுபாடாக அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இனி, இத்தலி ஜர்மனி ஜப்பான் இந்த மூன்று ராச்சியங்களும் பொன்னுசை மண்ணுசை அதிகாரப்பிராந்திகொண்டுநிற்கின்றன. ஜர்மனியர் தாங்கள் மகாயுத்தகாலத்திற் பறிகொடுத்த நாடுகளையும் தீவுகளையும் இப்பொழுது திருப்பித் தரும்படி பிரான்ஸியர் பிருத்தானியர் பெல்ஜியர் முதலானோரைக் கேட்டு நிற்கின்றனர்; இவர்கள் கொடுக்க மறுத்தால் யுத்தந்தானே என்பது உலகோர் யூகிக்கக்கிடப்பது. இம்மூன்று தத்துவ ராச்சியங்களும் ஸோவிய ருஷியரைப் பற்றிச் சிறிது சிந்திக்கின்றவேயல்லாமல் வேறு எந்த ராச்சியத்தையுமிட்டு அவைகள் பயப்படவில்லை. இச்சம்பவங்களையெல்லாம் உற்று யோசிக்குமிடத்தில் இந்த இத்தலிய—அபிஸீனிய யுத்தம் ஒரு உலக மகாயுத்தத்திற்கு உறபாதமென்று சொல்வதேயல்லாமல் இந்நாடு யுத்தம் முடிந்துவிட்டதென்று சொல்லுதல் முடியாதாகும்.

ஆரம்ப சூரத்துவம்

நமது விவசாய மந்திரி ஒரு கொமுத்த வகுப்புவாதி. இலங்கை, அதில வசிக்கும் பெருமபானமையோராகிய சிங்கள மக்களுக்கே உரியது என்று கருதும் சிங்களவனவானகளில் இவரும் ஒருவர். இவர் ஒரு பெரிய விவசாயத் திட்டத்தை ஆரம்பித்தார். ஆரமபிக்கும்போது இவர் கட்டியகோட்டையா அளவிடுதற்கரியது. மினனேரியா விவசாயத் திட்டத்தை ஆரமபித்தகனவான் இவரேஆவர். ஏனைய திட்டங்களிருப்பவும் அவற்றைவிடத்து, மினனேரியாத் திட்டத்தை இவர் பெரிதும் விரும்பியமைக்கு அடிப்படையானசாரணங்களுமிலாமல இல்லை. முன்னட்களில், சிங்களமன்னர் எவ்வாறு இலங்கையமுழுவதையும் செக்கெலகொழிக்குந் திருநாடாக வைத்திருந்தனரோ அவ்வாறே தாமும அதனை ஆக்கிவிடப் போவதாக இவர் விரையை முழுக்கினர். முழுக்கினவர் சாதாரணமாக முழுக்கவில்லை. மிக இறுக்கியே முழுக்கினர். நாமும் இவரது பெருமுயற்சியால் இலங்கையனைவரதேதோ எய்தவொண்ணாச் சிறபபையும் செல்வத்தையும் எய்திவிடப்போகின்றனர் எனவேஎண்ணிநிருந்தோம்.

மீக்க சூரத்துவத்தோடு ஆரமபிக்கப்பட்ட இவ்விவசாயத் திட்டத்தைப்பற்றிய அறிக்கை வெளியாகவிட்டது. 1935-ம் ஆண்டிற்குரிய நிர்வாக அறிக்கையில் இத் திட்டத்திற்குச் செலவான பணம் எவ்வளவெனபது குறிக்கபபடவேயில்லை. வரவுசெலவுத் திட்டத்தினை அங்கங்கள் சிலவற்றிலிருந்தே அதனை ஒருவாறு தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது அலவும் தெளிவாகக் கூறுகின்றில. 1934—35-ம் ஆண்டில் மினனேரியாத் திட்டத்திற்கென 20,000 ரூபா ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இத் திட்டத்திற்கென விடப்பட்டிருந்த 92,000 ரூபாவில் 68,000 ரூபா செலவாகிவிட, நிகழும வருடத்திற்கு விதியோசிக்கக்கூடியதாக இன்னும் 24,000 ரூபா இருப்பதாக 1935—36ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் குறிப்பிடுகின்றது. அதனோடையாது இதற்கென 14,500 ரூபா வேணடும் எனவும் கேடகப்பட்டது. அதுவேயுமன்றி, 1935—36—ம் ஆண்டில் "குடியேறும் விவசாயிகளுக்கு உதவிபுரிவதற்கென மற்றுமொரு 1,00,000 ரூபா அளிக்கப்பட்டதெனவும் குறிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இங்ஙனமே அறியக்கூடிய விபரம் மிகச் சிறியதாயிருந்தபோதினும், விவசாய மந்திரி தாம் கட்டிய கோட்டையை நிறைவேற்றுதற்காகப் பொதுப் பணத்திலிருந்து எவ்வளவு பெரிய தொகையைத் தம் விருப்பத்திற்கேற்ப அள்ளியிருக்கின்றார் என்பது இதிலிருந்து தெள்ளிதிற் புலனாகின்றது.

இம்மனப்பான்மைக்கு இனியும் இடங் கொடுத்தல் அறிவுடைமையாகாது. அரசாங்க சபையினர் இதனைத் தக்கவாறு ஆராய்ந்து இனனும் அவ்விதம் நடைபெறாமலிருத்தற்குத் தகுந்த வழிகளைக் கையாடாமல் விடுவாரயின் இலங்கையின் வருமானப் பணமெல்லாம் விழுங்கிறைத்த நீராகவே முடியும். இதனால் நாம் விவசாயத் திட்டங்கள் வேண்டாமென்று கூறுமுன்வரவில்லை. ஆயின் செய்வனவற்றை நன்கு ஆராய்ந்து செய்தல் வேண்டாமோ? அநுராதபுரப் பகுதிக்கு அங்கத்தவராயுள்ள மிஸ்டர். பிரேமன் ஒரு பெருந்தகையார்; விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் எதனையும் அவர் எதிர்க்கமாட்டார். விவசாயம் சம்பந்தமாகவும் ஏழை விவசாயிகள் சம்பந்தமாகவும் அவருக்கு மிக நுணணிய அநுபவம் உண்டு. அநுபவத்தோடு அறிவும் அரிய குணமும் அவர்பாலுள்ளன. இத்தகையார் விவசாயமந்திரி நிருபசேனநாயகா ஆரமபித்த மினனேரித் திட்டத்தை அக்காலத்தில் எதிர்த்தார். அப்போது அதற்கு மாறாகத் தக்க நியாயங்களையும் எடுத்துக் காட்டினர். ஆயின் மந்திரியார் கேட்டாரா? அன்றி மற்றைய அரசாங்கசபை அங்கத்தவர்கள் உணர்ந்தார்களா? 'விவசாயிகள்' என்னும் போரில் எதனையும் செய்துவிடலாம் என்று நமது மந்திரியார் கருதுகின்றார் போலும். அவரது திட்டம் ஆரம்பசூரத்துவமாகவே முடிந்தது. இனியேனும் அவர் இவ்வாறு பொறுப்பற்றத்தைத் தமது மனம்போன போக்கினபடி அவமே வரி இறையாமலிருக்குமாறு அரசாங்கசபை அங்கத்தவர்கள் தக்க பாதுகாப்புச் செய்து கொள்வார்களாக. மந்திரியாரும் எண்ணித் துணிவாராக.

அரிமாநோக்கு.

குறைந்த சீட்டுக் கட்டணம்

றெயிலுக்கும் பஸ்ஸுக்குமிடையே றெறுங்கிய போட்டி ஏற்பட்டு விட்டது. இதன் பலனாக இலங்கைப் புகைவண்டிப் பகுதியாரின் வருமானமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனை நிவர்த்திப்பான் கருதி இப்பகுதியார் பிரயாணச் சீட்டுக் கட்டணத்தைக் குறைக்கத் தீர்மானித்த விட்டார்கள். வருமஜுன் மீ முதல் காலைப்பிட்டிக்குக் கீழிருக்கும் ஊர்களுக்கு மூன்றாவது வகுப்பிற்கு மைலுக்கு 1-8 சதவீதமும் அதற்குமேலுள்ள மகாநாட்டு நிலையங்களுக்கு மைலுக்கு 2 சத வீதமும் பிரயாணச் சீட்டுகள் வழங்கப்படுமாம். இதினின்றும் இலங்கை றெயில்வே வருமானம் எந்த லைக்கு இறங்கி விட்டது. என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்வார்களாக. றெயில்வேப் பகுதியார் செய்யும் இவ்வுபாயத்தால் வருமானம் அதிகப்படுமா? என்பதே கேள்வி. றெயில்வே வருமானத்தை அதிகப்படுத்துவதற்காகக் காலத்துக்குக் காலம் பல உபாயங்கள் கையாளப்பட்டன. நிர்வாகமுறையிற் செலவுக் குறைவு ஏற்படுத்தப்பட்டது. பிரயாணிகள் சாமான்களை மலிவாக ஏற்றிச் செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டன. போகவரச் சீட்டுப் பெறுவோர்க்கு குறைந்த கட்டணம் ஏற்படுத்தப்பட்டது. விடுமுறைக் காலங்களில் யாத்திரை செய்வோர்க்கு விசேஷமாகப் போகவர ஒழுங்குகளும் செய்யப்பட்டன. எனினும் நினைவும் அற்பமும் மேம்பாடடைந்ததாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் ஏறக்குறைய 90 லட்சம் பேர் றெயில் மூலம் பிரயாணஞ் செய்கின்றார்களாம். இப்போது செய்யவிருக்கும் குறைந்த கட்டணத்தின்படி, வருஷம் ஒன்றுக்கு 150 லட்சம் பேர் பிரயாணஞ்செய்தாற்றான் இப்போது பெறும் வருமானத்தையேனும் பெற முடியுமாம். இந்நிலைமையில் இவர்கள் ஏற்படுத்தும் இக்கட்டணக்குறைவால் உடனே பிரயாணிகளின் தொகை இருமடங்காக அதிகரித்து விடுமா? என்பதே கேள்வி. அங்ஙனம் அதிகரியாதுவிடின் றெயில்வே அதிகாரிகள் கதி அதோகதிதான். அரசினரால் நடத்தப்படும் றெயில்வேப்பகுதி ஏனோ இவ்வளவு மேற்நிலையை எய்திவிட வேண்டும்? நிர்வாகத் திறனின்மையே காரணம் என்போர். இனியாயினும் அரசினர் இதனைச் செவ்வனே நிர்வகிக்க முயல்வாரா?

அந்தோ! அபிஸீனியாவே!!

சர்வதேச சங்கத்தில் தாமேதோலெட்டி விழுந்துவதாக வாய் வீரம் பேசிய ஐரோப்பிய வல்லரசுகள் அபிஸீனியரை கட்டாற்றிலே கைவிட்டனர். அகங்காரமே உருவமான இத்தாலியர் அற்பமும் தயாளகுணமின்றித் "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்" என்பதற் கிணைய அநியாயமாக விஷக்காற்றும் பைக்னியும் வெடிகுண்டுகளையும் பிரயோகித்து அநாதையான அபிஸீனிய மக்களை இரக்கமின்றிச் சித்திரவதை செய்தனர். அபிஸீனிய அரசியும் அரசகுமாரத்தியும் கண்ணீர் பெருக்கி உலக வல்லரசுகளிடங்கோரி உதவிவளிக்குமாறு வேண்டியும் அவ்வார்த்தைகள் செவிடன் காதில் ஊதின சங்காரத்தை கோத்தன. ஏழை சொல் அம்பலம் ஏறமா? பெண்ணென்றும் பேயுமிரங்கும் என்ற பழமொழியும் இவர்கள்பாற் பொய்த்துவிட்டது. 'இன்னும் இருநாட்களில அடிஸ் அபாபாவைக் கைப்பற்றி விடுவோம். உயிர் பிழைக்க விரும்பினால் இத்தாலியரப் பணியுங்கள்' என்னும் வார்த்தைகளைக் கொண்ட துண்டுப் பத்திரங்களை இத்தாலியர் விமானங்களிலிருந்து தலைகளிற போட்டார்கள். எனினும் அபிஸீனியர் அஞ்சவில்லை "சாகுந்தனியும் போராடுவோம் தேயன்றிச் சத்தருக்களுக்குப் பணியோம்" என்று யுத்தகாலத்திற்கற்பத் துணிகரமாக்கூறி அவர்கள் யுத்தம் நடத்தினார்கள். இயற்கைக்கன்னி மழையாகவந்து ஒருநிற்று உதவி செய்தாள். அவ்வளவிலும் இப்போது பயனற்றதாகிவிட்டது. அடிஸ் அபாபாவை இத்தாலியர்கைப்பற்றியேவிட்டனர் என்னுங்கூடச்சொல்லலாம். அபிஸீனியமன்னர் எங்கேயென்று தெரியாமல் ஓடிவிட்டதாகச் செய்தி கிடைத்துவிட்டது. குண்டுகளும் தப்பாக்கிச் குடுகளும் கொள்ளியும் கொலையும் அத்தலைகளில் தாண்டவமாடுகின்றன. இக்கிலேயில் வெள்ளை வல்லரசுகள் தம் வெள்ளைத் தனத்தைத் தெளிவாகக் காட்டிவிட்டன. தஞ்சமடைந்த கிஷ்டபரியாலனுஞ் செய்யும் செங்கோலமைமிக்க அரசுகள் இவை என்பது உலகம் முழுவதுக்கும் இப்போது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெரிந்துவிட்டது. உலகசரித்திரத்தில் இதினும் பரக்க நம்பிக்கைத்துரோகமும் கயவஞ்சகமும், வெறுப்பு பேதத்தனமும் நிறைந்தசெயல் பிறிதிருப்பதாகக்குத் தெரியக்கேயில்லை. அந்தோ! ஏழை அபிஸீனியாவே!

அரசர் நகர்விட்டகன்றார்

கோட்டுச் செய்திகள்

[நமது நிருபர்]

கஞ்சா வழக்குகள்

சென்ற மாதம் 24 ம் திகதி மூன்றாந்திவிப் பொலிஸ்கோட்டில் மதுப் பரிசோதகர் K K. சண்முகம் என்பவர் மேற்காணும் மூன்று வழக்குகளையும் நடாத்தினர்.

முதலியார் விநாயகத்தம்பி சோமசேகரம் என்பவர் சட்டவிரோதமாகத் தான் சிகிச்சைக்கு வீட்டுவளவுக்குள் முறையே 6, 5, 4½ அடி உயரமுள்ள மூன்று கஞ்சா மரங்களை வளர்த்தாரென்று குற்றஞ்சாட்டப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் எதிரிக்கு 200 ரூபா அபராதமும் பணம் கட்டத் தவறினால் 3 மாதக் கடுழிய மறியலென நீதிபதி தீர்ப்புக் கூறினர்.

வற்றாப்பளை சூசைராசிய அனந்தையர் பரமானந்த ஐயர் சட்டவிரோதமாக 420 கிறேயின் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கில் எதிரி தான குற்றவாளியென ஒத்துக்கொண்டதால் நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்தார். பணம்கட்டத்தவறினால் 8 மாதம்மறியல் இருக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

தனிஊற்றில் வசிக்கும் நாகப்பர் வேலுப்பிள்ளை என்னும் தமிழ் வைத்தியர் 490 கிறேயின் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எதிரிக்கு ரூ100 குற்றப்பணம் கட்டத்தவறின் 3 மாசக் கடுங் காவல் மறியலும் இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது.

தற்கொலை எத்தனம்

சென்ற 30-4-36ல் உருமபாயி வசிக்கும் மாணிக்கர் சுந்தையா என்பவர் சென்ற 22-ம் திகதி தனது வீட்டில் தனது கழுத்தில் கயிற்றை மாட்டித் தூங்கிச்சாக எத்தனித்த போது அவ்வூர் (1) காசிபிள்ளை, (2) செல்லையா ஆகியவர்கள் கண்டு தடுத்தனர் எதிரி தான் என்ன செய்தது என்று தனக்குத்தெரியாதெனக் கோட்டில் கூறினர். நீதிபதி எதிரியை 100 ரூபா நன்னடத்தைப்பிணையிற்போகுமாறு கூறினர்.

கணவன் — மனைவி பிணக்கு.

சென்ற 30-4-36 வியாழக்கிழமை யாழ்ப்பாண பொலிஸ் கோட்டின் பண்டியந்தாழ்வில் வசிக்கும் மாருதை யனார் சின்னத்தம்பி தனது மனைவி கனகமணி தன்னுடன் வாழ தனது வீட்டில் வசிக்க மறுக்கிறதாகப் பொலிஸ் நீதிபதிக்கு ஓர் மனுப்பத்திரம் கொடுத்திருந்தார். அது விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது கனகமணி கூறியதாவது: 'தான் பெட்மகாரரின் மனைவி அவர் என்னை மணந்து ஐந்து மாதக் காலத்தின் பின் என்னை விட்டுவிட்டார். நான் இப்போது எனது பெற்றாருடன் வசிக்கிறேன். நான் எனது புருஷனுடன் இப்போது போகவிரும்பவில்லை. ஏனெனில் அவர் சோயாளியாய்விட்டதால்லாமல் எனக்கு அடிக்கடி அடிக்கிறதுமுண்டு. அல்லாமலும் கடைசியாக அவர் என்னை விட்டுப்போகும் போகும்போது என்னை அடித்ததுமல்லாமல் எனது தாலிக்கொடியையும் கொண்டுபோய் விட்டார். நீதிபதி புருஷனைச் சிறில் வழக்குத் தொடரும்படி குறிப்பிட்டார்.

ஆடுதிருடியவனுக்கு அடி.

சென்ற 30 - 4 - 36 வியாழக்கிழமை புத்தூரில் வசிக்கும் இராமலிங்கன் என்னும் 15 வயதுச் சிறுவன் அவ்வூர் பண்டாரி பூதன் என்பவனுடைய ஆடுஒன்றைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் வயதிற் குறைந்தவனாய் இருந்தபடியால் நீதிபதி 10 அடி தீர்த்தார்.

சங்கிலித் திருட்டு.

சென்ற சித்திரை மாதம் 30 ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஆனையிறவில் வசிக்கும் (1) இராமசாமி கறுப்பையாவும் (2) இராமசாமி முத்தையாவு மென்ச சொல்லப்பட்ட இரு இந்தியச் சிறுவர்கள் கந்தரோடையில் வசிக்கும் கந்தையா சிவக்கொழுந்துவிடம் இருந்து 60 ரூபா பெறுமதியுள்ள ஓர் பவுண் சங்கிலியைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிகளுக்குத் தனித்தனி 10 அடி விதித்தார்.

வட இலங்கை அகில தீவுப்பற்றுமகாநாடு

யாழ்ப்பாணத்தைபடுத்த அகில தீவுப்பற்றுக்களின் பிரதிநிதிகளையுங் கொண்ட மகாநாடு எப்பிரல்மீ 26-க் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று புங்குடுதீவிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கூடியது. இம்மகாநாட்டைக் கூட்டிய திருகே. தம்பலவாணர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதில் இலங்கையிலுள்ள நிகளை மக்களும் தமிழரும் தம்முள் ஒற்றுமையாக வாழ்தல் வேண்டுமென்றும், கல்வி வாதிகள் சிலர் இருவகுப்பாரையுமுண்டியிட்டு விளையாட்டுப் பார்த்தல் கூடுமென்றும், அதற்கு நாம் இடங்கொடுத்தல் கூடாதென்றும், தலங்கை எவர்க்கேனும் சொந்தமல்லவென்றும் அது சிங்களர் தமிழராகிய இருகூறியினர்க்கும் பொதுவானதேயென்றார், ஆங்கே இலங்கை சிருத்தமாகுதல் இரு சாகிய ரின் ஒற்றுமையையும் பொறுத்ததென்றும் கூறினர். அன்றியும், அகில தீவுப்பற்றுகளையும் பாதிக்கும் சில விருத்தங்கள் சம்பந்தமான தீர்மானங்கள்கிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பௌதிகாசிரியர் நியமனம்

அரசினர் உதவும் கல்வித்திறமைப் பரிசுபெற்று இங்கிலாந்து சென்று கல்விகற்றவரும், பி. எஸ்சி. பட்டம்பெற்றவரும் பரமேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராக வேலைபார்த்து வருமாகிய திரு. வீ. எம். ஆசைப்பிள்ளை அவர்கள் இப்போது யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக்கு சயன்ஸ் ஆசிரியராக மாற்றப்பட்டிருக்கின்றார் என அறிகின்றோம். இதனால் இந்துக்கல்லூரி இன்னும் சிறப்படையுமென எதிர்பார்க்கின்றோம்.

"நவசக்தி" வெளியீடு

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'நவசக்தி' பத்திரிகை கடந்த பன்னிரண்டாண்டாகத் தமிழ் நாட்டுக்குச் செய்து வந்த சேவையைத் தமிழ் மக்களுக்கு விரிந்துகூற வேண்டுவதில்லை. இடையில் 'நவசக்தி' நிற்கலாகாததன் காரணம், அப்பத்திரிகைவாயிலாக வெளிவந்தமை யோர்கட்குத் தெரியும். அப்பத்திரிகை பழையபடி வாரப் பதிப்பாகவே 1936ஆ மேமீ 3-ம் வாரம் முதல் சென்னை இராயப்பேட்டையினின்றும் வெளிவரும் என்று 'நவசக்தி' மானேஜர் தெரிவிக்கிறார்.

வேடர் கஞ்சா வளர்ப்பதேன்?

பதனைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் சாட்சியாக வந்த ஹன்டுனு என்னும் வேடனை நீதிபதி பார்த்து "நீயேன் ஏன் கஞ்சா வளர்க்கிறாய்" என்று வினவியபோது, "துரையே, நாங்கள் இருக்கும் இடத்தில் வைத்தியர்கள் இல்லை; எங்கள் மனைவிமக்களுக்கு ஏதும் சுகவீனம் வரும்போது இந்தக் கஞ்சாவைத்தான் பிடுங்கிப் பிழிந்து மருந்தாகக்கொடுப்போம்" என்று பதில் சொன்னான்.

ஆகியவற்றைக் காலிசெய்ய வேண்டுவதுதான். காரணம் அவை இத்தாலியிலிருந்து 20 மிலியத்தில் பறந்து போய் விடக்கூடிய அவ்வளவு சமீபத்திலேயே இருக்கின்றன. முசோலினிக்கு மத்தியதரைக்கடல் பிரிட்டிஷாரின் காசத்திற்கான ஒரு பொற்வாயில் என்பது நன்கு தெரியும். ஆதலால் அவர் மெடிட்டேரேனியனிற் போதுமான இத்தாலி பலத்தைத் நிரட்டி வைத்திருக்கிறார். அக்கடலில் இத்தாலி வெடிகுண்டு விமானங்களால் நுகக்க முடியாத இடங்களே கிடையாது.

அடிஸ் அபாபாவில் இத்தலியர் பிரவேசம்

கொலையும் கொள்ளையும் துப்பாக்கிப் பிரயோகமும் தாண்டவமாடுகின்றன

லண்டன் 2-5-36

அடிஸ் அபாபாவில் இருக்கும் பிருத்தானிய பிரதிநிதி பின்வருமாறு தெரிவிக்கின்றார்:—

"சக்கரவர்த்தி தம்முடைய தேவியோடும் இளவரசரோடும் தலைநகரை விட்டு மறைந்து போய்விட்டார்; புறப்படும் சமையத்தில் என்னைக் கண்டு என்னுடன் சில பேசினர். இத்தலியர் அடிஸ் அபாபா நகரீற் புகுந்து துப்பாக்கிப் பிரயோகஞ்செய்து பொருள்களையெல்லாம் கொள்ளை கொள்ளுகின்றனர்."

பிருத்தானிய பிரசைகளும் ஏனைய ஐரோப்பிய பிரசைகளும் பாதுகாப்பான டங்களில் இருக்கின்றார்களாம். அவர்களுக்கு எவ்வலையான சேதமும் இல்லையாம். பிருத்தானிய பிரசைகளாகிய இந்தியரும் சோமாலிலாந்தின் பிருத்தானிய பிரசைகளுமாக இன்னும் ஆயிரக்கணக்கானோர் அபிஸீனியாவில் இருக்கின்றார்கள். பிருத்தானியருள் 30 போ தலைநகரில் இப்பொழுதும் இருக்கின்றார்கள்.

சக்கரவர்த்தியும் குடும்பத்தினரும் எங்கே போகின்றன ரென்பதை அறியமுடியவில்லை.

அடிஸ் அபாபாவிலுள்ள பிருத்தானியரை இத்தலியர்போய்ப்புகுந்தவுடன் நாட்டைவிட்டுப் போகும்படி கேட்பாரோ, இல்லையேல் அவர்கள் கேட்டமுந்தி இவர்கள் புறப்பட்டுவிடுவார்களோ என்பது தெரியவில்லையாம்.

முந்திய செய்திகள்.

29-4-36

தென்பதியில் மழை பெய்யத் தொடங்கி விட்டமையினால், இத்தாலிய சேனாபதியாகிய கிறஸியானி தமது சைந்யங்களுடன் முற்பட்டுச் செல்லுதல் முடியாதாக, தம் சைந்யத்தை ஒரு இடத்தில் நிறுத்திக் கொண்டாராம். இந்த மழையினால் பாதைகள் சகதியாயின. வண்டிகளும் கோவேறு கழுதைகளும் யுத்தக் கருவிகளை ஏற்றிக் கொண்டு

அநாமதேயப் பேர்வழியின் கடிதம்

காந்திஜீயின் பதில்

"பிரமச்சரியத்தின் விசேஷத்தை உணர்ந்தால் இவர் மணவியைத் தம் வழியில் திருப்பிவிட முடியாதா?"

நவஜீவன் என்னும் பத்திரிகையில் மகாத்மா காந்தி பின்வருமாறு எழுதுகின்றார்;—

யுவர்களைக் கருதி "ஹரிஜன்" பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரை சம்பந்தமாக ஊர் பேர் ஒன்றும் குறிப்பிடாமல் ஒருவர் எனக்கு ஒரு கேள்வியை வரைந்துள்ளார். இத்தகைய அநாமதேயக் கடிதங்களை அலக்ஷியஞ் செய்து விடுதலே முறையாயினும், விஷயம் முக்கியமாக இருத்தல் பற்றி அதனை நான் அங்ஙனம் செய்யவில்லை.

இந்த நிருபர் எழுதியுள்ள கடிதத்தின் சாராம்சமாவது:—

"நீங்கள் எழுதுவதை நோக்கில் யுவர்களுடைய மனோபாவத்தை நீங்கள் சரியாக அறிந்திருக்கிறீர்களென்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உங்களுக்குச் சாத்தியமான காரியம் எல்லா யுவர்களுக்கும் சாத்தியமானதாக இருக்க வேண்டியதில்லை. எனக்கு விவாகமாகியிருக்கிறது. நான் மிருகவுணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடும். ஆனால் என் மனைவியால் அது சாத்தியமில்லை. குழந்தைகளைப் பெறவேண்டுமென்ற அவள் விரும்பவில்லை. ஆனால் சுகத்தை அவள் நாடுகிறாள். நான் என் செய்வது? அவளைத் திருப்தி செய்ய வேண்டியது என் கடமையல்லவா? வேறுவழிகளில் அவள் அந்த இச்சையைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்வதற்கு இடங்கொடுக்கும் பெரிய புத்தியை நான் படைத்துக்கவில்லை. நீங்கள் விவாகங்களை நடத்தி வைப்பதையும், தம்பதிகளை ஆசீர்வதிப்பதையும் வெறுக்கவில்லை என்று நான் அறிகிறேன். நீங்கள் குறிப்பிடும் உயரிய நோக்கத்துடனே விவாகங்கள் செய்து கொள்ளப்படுவதில்லை யென்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்."

இந்த நிருபர் சொல்லுவது சரியே. வயது, செல்வு, முதலிய விஷயங்களில் நான் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து வைக்கும் விவாகங்களை நான் ஆதரித்து, தம்பதிகளுக்கு ஆசிகூறுவதுண்டு. அஃதொன்றே எனக்கு அவர்களுடைய மனோபாவம் தெரிந்திருக்கிறதென்பதற்குப் போதிய அத்தாக்ஷியாகும்.

இந்த நிருபரின் கஷ்டம் அபூர்வமானதாக இருக்கிறது. அவரிடத்தில் நாம் அனுதாபம் காட்டவேண்டியிருக்கின்றது. குழந்தைகளைப் பெறுவதற்காகவே விவாகம் செய்து கொள்ளுகிறோம் புருஷ சங்கம் நடைபெறுகின்றதென்பதை நான் இதுவரையில் கேட்டறியாத புதுமையாக இருக்கிறது. இருந்தாலும் இந்த விதி இருந்து வருகிறதென்பதை நான் அறிவேன். ஆனால் அதற்கு அதிக முக்கியத்தை நான் கற்பிக்கவில்லை. அது இதுவரையில் சாதாரண ஆசையென்றே நான் கருதியிருந்தேன். அது விவாகத்தின் அடிப்படையான நோக்கமென்று நான் இப்பொழுது கருதுகிறேன். சமூகவாழ்வில் அதற்கு ஒரிய ஸ்தானத்தில் அதை வைத்து விட்டால் என்னுடைய நோக்கம் கைகூடிவிடும். என் சம்பந்தப்பட்டவரையில் அது ஒரு இயிரச் சட்டம். நாம் எப்பொழுதும் அதை மீறி நடந்து தண்டனைக்காளாகின்றோம். இதன் விசேஷத்தை இந்த நிருபர் உணர்ந்து, மனைவியை, நேரிப்பவராயும் தன்னம்பிக்கை உள்ளவராகவும் இருந்தால், மனைவியை இவர் தம் வழியில் திருப்பிவிடலாம். தாம் இச்சையை அடக்கிக் கொள்ளக் கூடுமென்று இவர்சொல்லுவது வாஸ்தவமா? இவருடைய இச்சையானது சகோதரப் பிரஜைகளுக்குச் சேவை செய்ய வேண்டுமென்னும் உயரிய லக்ஷியமாக மாறிவிட்டதா? தம்மனைவியின் இச்சையைக் கிளப்பிவிடக் கூடிய சேட்டைகளெதையும் இவர் செய்யாமலிருக்கிறாரா? ஹிந்து சாஸ்திரங்களின்படி கட்டுவித சங்கமங்கள் இருந்து வருகின்றன. சாடை காட்டுவதும் அவற்றில் ஒன்றாகும். இந்த நிருபர் அவற்றில் எதற்கும் இலக்காகாமலிருக்கிறாரா? அவ்விதம் இல்லையேல், காம இச்சையிலிருந்து மனைவியை விடுக்க வேண்டுமென்று இவர் கருதுவரேன், அவர் அவள்பால் அன்பைப் பொழியட்டும்; தர்மத்தை அவளுக்கு எடுத்துச் சொல்லட்டும்; குழந்தை உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணமில்லாமல் சங்கமம் செய்வதால் சரீரத்திற்கு ஏற்படக் கூடிய நஷ்டத்தை எடுத்தோதட்டும். ஸ்த்ரீயின் மகிமையை அவளுக்கு எடுத்துச் சொல்லட்டும். தவிரவும் அவளை நல்லகாரியங்களில் திருப்பி, மிருக இச்சையை அழித்ததுவிடக் கூடிய ஆகாரக்கிரமங்களை அவள் அனுஷ்டிக்கும்படி செய்யட்டும். எல்லாவற்றிலும் முக்கியமாக, இவர் மதப்பற்றுடையவராக இருந்தால் அத்அவளுக்கு ஏற்படும்படி செய்யட்டும். கடவுளிடத்தில் அதாவது சத்தியத்தினிடத்தில் நம்பிக்கையில்லாமல் மிருக இச்சையை அடக்கி வைத்துக்கொள்ளுவதென்பது சாத்தியப்படாது. கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாமலே வாழ்வில் அடையக்கூடிய எல்லா இன்பங்களையும் அனுபவித்தவர்களாயினும் இவர் அதனை இழப்பது ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. நம்மிலும் மேலான சக்தி ஒன்றுண்டு இவ்வுலகத்தை ஆட்டிவைக்கிறதென்பதை உணராதவர்களுடைய மனதில் அந்த உண்மையைப் பதியுமாறு செய்வது என்னால் முடியாது. அணுவும் அசைவதற்குக் காரணமாக இருக்கும் அவனிடத்தில் நம்பிக்கையில்லாமல் எதுவும் சாத்தியமில்லையென்பது என் அனுபவம். அந்த நம்பிக்கையில்லாதவன் கரையின்மேல் எடுத்துச் சிந்திய சமுத்திர நீர்த்துளிக்கே ஒப்பாவான். சமுத்திர நீரோடு அந்தச் சிறுதுளி சேர்ந்திருக்குமானால் அதற்கு மதிப்பு இருந்தது. அப்பால் அந்த மதிப்பு உண்டோ?

கடிதம்.

கோண்டாவில் மயான விஞ்ஞாபனம்.

"அன்றறிவா மென்னு தறஞ்செய்க [மற்றது
பொன்றுங்காற் றொன்றுத் துணை"

என்னும் நாயனார் வாக்கைக் கோண்டாவில் வாசிகளாய அனைவரும் சிந்தித்து உங்கள சரீரத்துக்கு உரிமை ஆட்சியான சுடலையில் ஒன்று ஒன்று இல்லாக்குறையை நீக்க அனைவரும் ஒன்றுபட்டுத் தத்தமக்கியன்ற பொருளுதவிப் புகழையும் புண்ணியத்தையும் அடைக.

உடம்பழியினும் உடர்போடு கூடி வாழும் நாளில் நாம் செய்த புண்ணிய பாலங்களை உயிரோடு சென்று மறு பிறப்பில் இன்ப துன்பங்களைத் தருவதாதலின் இன்பத்துக்குக் காரணமாய புண்ணியத்தை இளமையும் பொருளுமுள்ளபொழுதே உலோபகுண மனத்தை (தருமவழியில் செலவழித்தால் பொருள் குறைந்துவிடுமென எண்ணும் பாவமனம்) நீக்கி இயல்புக்கேற்ற தருமத்தைச் செய்து வாழ்வாரே மனித சென்மப் பயனை அடைவர்.

இதனை எழுத நேர்ந்த காரணம்

26-3-36 வியாழக்கிழமை உங்களூரிற் சிலகாலம் வசித்து இறந்த ஸ்ரீமான். மா. சதாசிவம் என்னும் வைத்தியருடைய பிரேதத்தில் சைவவிதிப்படி அபரக்கிரியை செய்தற்கு மயானத்தில் தண்ணீரின்றி அம்மயானத்துக்கு வந்த குருக்களும் பிறரும் கிணறு எங்கேயிருக்கிறதென்றறியத் தங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தூர எங்கே தெரிகிறதென்று பார்த்துச் சுடலைக்குத்தெற்கேதூரத்தே தெரிந்த தலாவுடைய கிணற்றில் தண்ணீர் அள்ளி வருவதாய் ஒருவர் மிக வேகமாய்ப் போய் 20 நிமிஷத்தளவில் தண்ணீர் கொண்டுவந்தபின பேரிரியை ஆரம்பிக்கப்பட்டது

இம்மயானத்துக்குத் தெருவிலிருந்து போகும் பாதையோ மிகவும் வசதியற்றது. முள்ளுச் செடிகளும் குதிரைவாலி என்னும் புல்லும் இன்னும் பல வகையான வசதியும் அற்றன இச்சுடலையில் ஒரு கிணறாவது உண்டு. அதுவோ இருப்பதற்கேற்ற நிலையில் இல்லை. இதனைக் கட்டிய பேரேனும் அவர் சந்ததியரேனும் அல்லது பிறரேனும் அதைத் திருத்தக் கிணயாதிருப்பதும் கவலைப்படத்தக்கதே. ஏனெனில் இச்சுடலைக்கரித்துடைய கோண்டாவிற் பகுதியில் இப்பொழுது வசிப்பவர்களிற் பலர் தயிவேலை முதலிய இடங்களிற் பிரபல உத்தியோகத்தில் உயர்ந்த சம்பளம் பெறுபவர்களாயும் கல்வியிலே சீர்மை பரிசுகளுஞ் சென்று உயர்ந்த பட்டமும் பெற்று உயர்ந்த சம்பளமும் பெற்று உயர்தரக் கலாசாலையிலே கலை கற்பிப்பேராயும், பெரியதொரு பாரிஸ்டராயும், கமர்செல்லர் சேர்ப்புடையராயும் இருக்கின்றனர். அப்படி இருந்தும் பிறர் இப்பகுதிக் சுடலையின் நிலைகண்டும் இப்பகுதியாரின் செல்வநிலைகண்டும் விசனப்படாமலிருக்கத்தக்கதோர்? இச்சுடலையிலுள்ள மடநிலையையும், இச்சுடலைக்குத் தெருவிலிருந்து போகும் வழியையும் திருத்தி இச்சுடலையில ஓர் கிணறாவெட்டிவிட வேண்டிய வழிவகையைப் பற்றி அன்று அச்சுடலையிலிருந்து பேசியதால் உடையவ சுடலை ஞானம் அடைந்த பலரும் இப்பொழுதிங்கு இருப்பவர்களிடம் அவரைச் தருதிக்கேற்ப இந்தத் தரும காரியங்களை சித்திரையில் ஆரம்பித்து விடவேண்டுமெனப் பேசி 100 ரூபா வரையில் சேர்த்து இருக்கிறார்கள் அச்சுடலையிலிருந்து பேசியவர்களும் அல்லூர் வாசிகளும் தருமமே தங்களுக்கு உண்மைத்துணை யென நம்பி அதனைச் செய்தற்கு முற்பட்டுப் பொருள் உதவி செய் தருமங்களைச் செய்துமுடிப்பார்கள் என நம்பும்.

நங்கள் கண்பன்
"அறஞ்செய விரும்பி"

நீங்கள் ஒரு சிறுகாரை வாங்கும்போது பின்வரும் குறிப்புக்களை அவதானியுங்கள்.

ஆஸ்ரின்

செவினில்

1. 4 ஸ்பீட் கியர் பொக்ஸுடன் 3 ஸ்பீட்ஸ் சிங்கரமேஷனும் உண்டு
2. ஸைலேன்சரும் லக்கேஜ் கரியரும் உண்டு
3. அபாயமின்றிக் காரைச் செலுத்தக்கூடியவிதமாகக் காஞ்சுகிலியும் ரிட்டேன் டிரெக்ஷன் இண்டிகேட்டர்ஸ் உண்டு
4. கரோமியம் பிளேட்டுள்ள டிஃபன் சுவிச்ஹெட்லாம்ஸும் ஸ்டொப் லைட்டும் உண்டு
5. ஒளிபொருந்திய இன்ஸ்ட்ருமென்ட் பேனல் உண்டு
6. சிழ்கதவை லைல் உண்டு
7. செலவுச் சுருக்கத்திற்கேற்ற பாரக்குறைவு உண்டு

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றெட் கொழும்பு.



நீங்கள் ஆஸ்டின் காருக்குக் கொடுக்கும்பணம் பழுதற்ற பணமாகும்.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம், ஆகிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & ஸன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y 137. 19-8-35. — 18-8-36.

புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொளும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக்கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழுவிபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழுமபு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற்,கொழும்பு என்றவிலாசத்தற்குஎழுதவும்

H. 200. 13-11-35 to 12-5-36.)

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

"இரதி மன்மத"
சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடுரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா	400

தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கொல்லம், Quilon S. India.

H 208. 1-12-35 to 31-5-36.

விரைவில் வெளிவரும்! எதிர்பாருங்கள் !!

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாதரப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பும்,

சிசேஷ்ட பாடசாலை விடுகைத் தாதரப்பத்திர வகுப்பு (1937) [S·S·C·] இலக்கியக் குறிப்பும்.

இவை சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றன. இவைகளில் பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள். சொல்லிலக்கணம், சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளன.

கண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
(Mis 12. 13-4-36.)

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.

இது நெஞ்சில் உண்டாகும் மண்டை யிடிக்கிய ஜந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்களில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், கலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. தெரியாதோர் பெரியோரும் வயது விதியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறலாகும்.

இலங்கையிலுள்ள எனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், மிராசுதாரர்களுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணங்களைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் நெந்த எண்ணெய்க்கு சீனட பெயர் உண்டு என்று ஊர்ஜிதமிகிற ஒவ்வொரு தெயினர்க்கும் தெரியும். நெஞ்சு ஏறுபடுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இன நரை, தலைமுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உதகரவாரம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது சற்காலத்தில் செய்யப்படும் போலித தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட் டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332. 20-3-36 to 19-9-36)

கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
(FIXED DEPOSITS)

எங்கள் வங்கியில் கேஷமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்கும் பின்வரும் விசிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

6 மாச காலம்	3½ விசிதம்
12 மாச காலம்	4½ விசிதம்
24 மாச காலம்	5 விசிதம்

ஏனைய விபரங்களை எங்களிடம் வினவியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

சமரச ஆலயத் திறப்புவிழா

மாளவியாஜீ திறந்துவைக்கப் பல வைதிகர்களும் வந்திருந்தனர்.

பெனாரிஸ், ஏப்ரல் 25.

கேற்று மாலை டாட்டோங்காஞ் என்னும் இடத்தில் பண்டித மாளவியா அவர்கள் ஹரிஜனங்கள் முதல் யாவரும் உட்பிரவேசித்து வணங்கக்கூடிய ஒரு கோயிலைத் திறந்து வைத்தார்கள். வைதிகப் பண்டிதர்கள் உட்படப் பெருந்திரளானவர்கள் அங்கு வந்திருந்தார்கள்.

இன்று காலை, சமயத்தொண்டு சம்பந்தமாக, அவர் அயோத்திக்குச் செல்ல எண்ணியிருக்கின்றனர்.

பட்டினசங்க எல்லையுள் இருக்குந்தெருவீதிகள்

பட்டின சங்க எல்லையுளிருக்குச் செருவீதிகளுக்குப் பொறுப்பு பரிபாக வேலைப் பகுதியாரோ, மாகாண 'எனஜினீர்'பகுதியாரோ, இல்லையேல், பட்டின சங்கத்தாரா மோஎன்ற ஆசங்கை தோன்றத் துயித்த தெருக்களுக்குப் பொறுப்பாளிகள் பட்டின சங்கத்தாரே யென இப்பொழுது மேலதிகாரிகள் நிச்சயித்திருக்கின்றனராம்.

குப்பாபிடேகம்

அதுராச புரத்திலே மிகப் புராதனமாகவுள்ளதும் நுகரைவரவியின் கரையிலுள்ளதுமாகிய பிள்ளையார் கோவில் இதுகாறும் மடாலயமாகவே இருந்தது. இப்பழைய க்ஷேத்திரத்தை ஆகம முறைப்படியான ஆலயமாக இப்பொழுது கட்டுவித்தவர் சுவாடி வே. திருஞானசம்பந்தக் குருக்களாவர்; மேற்படி குருக்களவர்களால் நிகழும் சித்திரை மீ 22 உ திங்கட்கிழமை (இன்று) நிகழும் சுபமுகூர்த்தத்தில் விநாயகப் பெருமானுக்கும் பைரவ மூர்த்திக்கும் குமபாபிடேகம் நிகழுமென வறியலானேம்.

விளம்பரம்

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவிவனபரிபாலனரவர்களால் யாழ்ப்பாணம் மரக்காலையில் 1936 ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் திகதி செவ்வாய்கிழமை காலை 9-30 மணிக்கு விநிகப்படும்:—

Lot I 22 பாலைமரங்கள்
Lot II 9 முதிரைமரங்கள்

ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு கன அடிக்கு 25 சதத்திலிருந்து ஒரு ரூபா வரைக்கும் வழக்கமான விலையிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது.

A. B. Lushington,
வனபரிபாலனர்

வனபரிபாலனரது காரியாலயம்
கொழும்பு 8-4-36
G 11. 4-5-36

THE
"NEW ERA SERIES"
OF
School Text Books

பாடசாலைகளுக்குரிய புதிய தமிழ் நூல்கள்

செந்தமிழ்க் கருவூலம் (1—3)

கதாவாசகம்

முதலியன.

அரசினர் துவிபாஷா ஆசிரியர் திரு. மா. பீதாம்பரன் அவர்கள் இயற்றியவை.

விரைவில் வெளிவரும்.

(Q. 22. 1-5-36—31-7-36.) (2)

சைவ பரிபாலன சபை.

(27-4-36 இன் தொடர்)

The average number on roll for 1904 was 382 and the average daily attendance for the year was 310 giving a percentage of 81-1. The percentage of daily attendance for 1903 was 75.9. These figures show improvement in attendance during 1904. But the percentage of attendance can still further be raised if the parents will co-operate with the teacher in putting a stop to all cases of absence from school on very slight and trifling causes. Habits of regularity and punctuality which are formed in the early impressionable years of boy-hood will contribute much to their success in school and in the varied occupations of life when they become men a boy who is not regular often loses the sequence of studies, and though he is able to put in the attendance to qualify him for the Government Examination is very often found inefficient to be presented.

Government Examination

The Examination for grant was held in October 1904. The school on the whole did as well as in previous years. But the Inspector's test revealed many of our short comings and notably the defects in the teaching of Writing, Arithmetic and Grammar. A note of these was taken, and an effort was made to improve the hand-writing of our boys, beginning with the first four standards, where it was easier to remedy the defect. Decided progress has been made in the space of a year in writing, and it is hoped that within the next five years the whole school will be taught a neat uniform style of writing. In this connection I wish to add that great attention was also paid during the year to neatness in the formation of figures representing numbers, with very good results. In teaching Arithmetic, greater attention has been paid to neatness and method.

Clear statements of the working are always insisted upon, and much good work has been done which is sure to improve in the future.

In the teaching of Grammar, instead of starting with the principles and the definitions, a large number of examples illustrating the rules are taught at first. The boys are given exercises to construct sentences illustrating the various grammatical principles and are made to feel and realise that the real use of the subject is in helping them to speak and write English correctly and to express their thoughts accurately.

In the teaching of the various subjects better methods are being gradually adopted and it is gratifying to find that the teachers take greater care in preparing the class lessons at home and that the interest and attention of the boys have been thereby greatly awakened.

The Teaching Staff

The present staff consists of the Principal, 3 Lecturers, 9 Assistant Masters, and Tamil Pandit. Mr. S. Veerasamy, B.A., (Madras) was appointed lecturer in Mathematics in June 1903. He is a Mathematics graduate and is very successful in teaching his special subject in the College classes. Mr. E. Kandiah who passed the F. A. Examination in 1904 was appointed Master of the 4th Standard in June 1904. He has since passed the 2nd Class Teachers' Certificate Examination and is a valuable addition to the staff.

The School Department

As the 4th and 6th Standards were too large to be taught efficiently by a single teacher, they were each devided into two sections and placed under seperate masters. In making this division the big boys of each class were seperated from the smaller ones, an arrangement which has been found very beneficial in many ways to the smaller boys.

The College Department

The College, since its affiliation with the Calcutta University in 1895 was preparing boys for the Entrance and F. A. Examinations. But since the Indian Universities' Act delimiting the territorial area of each of the Universities will come into operation in 1906, the Ceylon College if they follow the Indian system will have to seek affiliation with Madras. The College authorities, after careful consideration, have decided to affiliate the College to the Madras University.

The condition of affiliation are more stirugent than those of Calcutta, and a sum of Rs. 5000 is immediately needed for getting down the necessary physical chemical apparatus and models for teaching Physiology, to provide the College with a gymnasium, a proper boarding establishment and a reference and lending library, and to effect the required sanitary arrangements.

A general appeal was made for funds to supply these needs and a few gentlemen have most generously responded to the appeal. As the Deputation from the University will shortly visit Jaffna to inspect the college and to report on them, it is the duty of the Hindu public to help the Board of Directors to provide the college with all that is necessary.

University Examinations.

Of the two candidates who went in for the Sinier Local Examanation in 1904, C. Thamby, who was under age, passed the Examination. Nineteen students appeared for the Calcutta Entrance Examination, 7 of whom passed. One was placed in the 1st Division. 3 in the 2nd Division, 3 in the 3rd Division. Seventeen students appeard for the F. A. Examination and 9 were successful. One was placed in the 2nd Division and 8 in 3rd Division. E. Nagalingam who was a student of the College, and who appeared last year privately as a teacher, passed the F. A. in the 1st Division. It is notable fact that 1904 was the first in which candidates from the colleges in Jaffna were able to pass the F. A. Examination of the Calcutta University in the 1st Division and therefore the distinction gained by E. Nagalingam is a credit to himself and the College.

(தொடரும்)

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

Y 53 1-1—31-12-36)

ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஔஷதம்.

மலபந்தமே உலகினில் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி ரொமாம் மலம்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அறுவலைகளுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை நன்றாகும், தீருடன் ஸ்வாஸ்தமாகும், உடம்பு இளைத்து வருதல், கை கால்சோர்வு, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடட்டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75,

நீரழிவுக்கு.

அப்ரேக் சேந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் மேலி அளவுமுமியான நெரிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் சேந்தூரம் ஒரு லிட்டி எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும், அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஜலம் நீரால் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.

ஸ்பெஷல் அனுபானம் சதாவாரி லேயம் ரூபா 4-00.

தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் பொலிந்த சரீரத்தில் புரியாததை ஊறச்செய்து தாதற்ற பலம், ஞாபகம் வீரிய விர்த்தி உண்டாகும். பத்தியமில்லை. (விபரமான கேட்டால் இலும்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அனுபானம் லேயம் ரூபா 2-50.

வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 தி (Palni S. I.)

யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரைபிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சரிதி சாரசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1விகிதவட்டியடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம் 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "ராஜனன்" கம்பெனியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுகாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (சீமைகாதலர்கள்) முதலியோர் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.

(Y 203. 21.11.35—20-11-36) (தி.) மானேஜர்

வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜான்ஞ ரங்க்" தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலையா முதலிய இடங்களுக்கு சேரகவும் உலகதில் எவை பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் காணயங்கள், கோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகதிலுள்ள எந்தப் பிரதான துறைமுகதிலும்போய் இறங்குதக்காக, கரியுனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சாலவிர வகுமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ் பீ. ஜோசெப்,

(Y. 188. 21-10-35—20 10-36.) தி மானேஜர்.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரயோகங்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபரிசுகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில்லாமல் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரயோகங்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னுமநேக கடுமையான வியாதிகள் தீருமஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவஅறையில் உண்டாகுங் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨.0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினங்கு முதலிய தொடு வாயிரரச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,

வெலூன் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,

காத்தான்குடி போஸ்டு,

மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-36) கிலோன்.

வண்ணைநகர்

தையல்நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

திருவூஞ்சல்,

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,

சைவப்பிரகாசயந்திரசாலை,

வண்ணார்பண்ணை.

விளம்பரவிகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1	பந்தி	(கலம்)	ரூபா 10-00
½	,,	,,	,, 5-50
¼	,,	,,	,, 3-00
1	அங்குலம்		,, 1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் கிடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் கேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்

சைவப்பிரகாசயந்திரசாலை

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின்படி கொடுக்கப்பெற்ற அடைவு பிடிக்கும் தொண்டமானாறு வேலாயுதபிள்ளையாதியோரை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டுத் தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏடுதில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1933 கார்த்திகைமீ

இல.	ரூ.	ச.	பெயர். ஊர்.	நகை விபரம்.
A 1222	30	04	க பொன்னுச்சாமி உடுப்பிட்டி	சயமணி 1
1258	15	04	வ இராசையா அச்சுவேலி	புரேச் 1
1334 கைமீ				
1281	6	04	வே இளையதம்பி உடுப்பிட்டி	வளிக்கூட்டம் 1
மாமீ				
1326	7	04	ச க கதிரவேற்பிள்ளை	தம்பாலை மோதிரம் 1
வ்வாமீ				
1440	10	04	வே இலச்சுமியார	செட்டியனூர் மோதிரம் 1
1457	10	04	ஷையார் ஜெயர்	கொண்டைப்பூ 1
1496	300		தா கந்தையா	அச்சுவேலி சங். அட்டியல் பதக்கம் 1ம் அட்சரம் சங்கிலி 1ம் ½டலர் சங்கிலி 1ம்
ஆடிமீ				
1526	8	04	ஐ பாதுவறி	மயிலியதனை கல்குச்சி 2ம் வாளி 1
புரட்டாதிமீ				
1568	25	04	பெ தங்கமுத்து	கொம்மந்தை கல்லுத்தோடு 2 கல்லுக்குச்சி 3 வாளி 2
1600	130	04	க பொன்னையா	கதிரிப்பாய் செடிக்காப்பு சோடி 1
1601	10	04	தம்பன்	தெல்லி கொருடாவில் கலுவக்கடுக்கன் சோ 1
1608	21	04	இ செல்லத்துரை	உடுப்பிட்டி மோதிரம் 1ம் சங்கிலி 1ம்
1623	10	67	அ தங்கமுத்து	கொம்மந்தை கடுக்கன் கூட்டம் 1
ஐப்பசிமீ				
1647	80	42	வ சுப்பிரமணியம்	வல்லுவெட்டி தாலிக்கொடி 1
1664	10	04	க கந்தவனம்	காணவாய் தாலி 1
கார்த்திகைமீ				
1678	15	04	வே ஆறுவி	அச்சுவேலி கடுக்கன் கூட்டம் 1
மார்கழிமீ				
1705	17	04	ம தங்கம்மா	கொருடாவில் நெறிபின்னைக்காப்பு வாளி 2ம்
1706	25	82	வ செல்லையா	கொம்மந்தை நெறிபின்னைக்காப்பு சோடி 2
1713	35	04	சி கந்தசாமி	உடுப்பிட்டி நெறிபின்னைக்காப்பு சோடி 2ம் வாளி 2ம்
1935ம் ஆ தைமீ				
1732	8	04	மு சுந்தரையா	உடுப்பிட்டி கல்லுக்குச்சி 4
1748	50	04	ச சி வேலுப்பிள்ளை	உடுப்பிட்டி வயிரக்காப்பு 1
1762	30	04	மு பொன்னுத்துரை	கொருடாவில் சங்கிலி 1
1801	30	04	பெ இராமசாமி	கொம்மந்தை கலுத்தோடு 2 கல்குச்சி 3ம்
1808	10	04		கைதாகமுத்து இடைக்காடு கடுக்கன் கூட்டம் 1
பங்குனிமீ				
1817	75	04	க செல்லையா	உடுப்பிட்டி மெழுகுகாப்பு சோடி 1
1822	16	02	வே முத்துக்குமாரு	உடுப்பிட்டி கடுக்கன் கூட்டம் 1

விற்பனவு தாதுஷு வைகாசிமீ 10ம் திகிக்குச் சரியான 1936ம் ஆண்டு மேமீ 23ம் திகதி சனிக்கிழமை முன்னேரம் 8 மணி தொடக்கம் எடுபட்ட நகைகள் பிறகிங்கலாக மிகுதி மேற்படி அடைவுபிடிப்பவரின் வீட்டில் பிரசித்த ஏடுதில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாரு ஐயர்,

கொழிக்மேனேஜர்,

பருத்தித்துறை

(Mis. 21. 30-4 & 4-5-36.)

"ஒழுக்க முடைய குடிமை யிழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்."

பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

யாழ்ப்பாணப் பட்டினம்	தமிழ் ரூ. ச.	ஆங்கிலம் ரூ. ச.	இருபிரதிகளும் ரூ. ச.
(கோசுக்க எல்லைக்குட்பட)			
ஒருவருடத்திற்கு	5 - 00	5 - 00	9 - 00
½ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00
¼ வருடத்திற்கு	2 - 00	2 - 00	3 - 75
இலங்கை இந்தியா			
ஒருவருடத்திற்கு	8 - 00	8 - 00	12 - 00
½ வருடத்திற்கு	4 - 50	4 - 50	7 - 00
¼ வருடத்திற்கு	2 - 50	2 - 50	4 - 50
சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள்			
ஒருவருடத்திற்கு	9 - 00	9 - 00	13 - 00
½ வருடத்திற்கு	5 - 00	5 - 00	7 - 50
¼ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்,

"நியூஸ்மார்ட்"

89. கோவில்தெரு,

கும்பனித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்

கோன்முறை யாசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க

கான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க

மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Monday, 4th May 1936.